வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 20.07.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 229 | பக்கங்கள் : 16

# கொழும்பு மாவட்டத்தில் அதிகரிக்கின்றது டெல்டா!

## நாடு முழுக்க பரவி இருக்கலாம் என அச்சம்

**கொழும்பு, ஜூலை 20**

**கொழும்பு மாவட்டத்தில் பதிவான கொரோனா நோயாளர்களில் சுமார் 20 முதல் 30 சதவீதமானோர் டெல்டா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருக்கலாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

**கொரோனா நோயாளர்களிடம் இருந்து எடுக்கப்பட்ட வைரஸ் மாதிரிகளை பரிசோதித்ததன் ஊடாக இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

15



## வவுனியாவில் டெங்கு நுளம்பு பரவும் ஆபத்து!

*வவுனியா, ஜூலை 20*

வவுனியாவில் பரவலாக மழையுடனான காலநிலை நீடித்து வருவதால் டெங்கு நுளம்பு பரவும் ஆபத்து அதிகரித்துள்ளதாக சுகாதாரத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் பரவலாக மழையுடனான காலநிலை அதிகரித்து காணப்படுகின்றது. எனவே இக்கால நிலையால் டெங்கு நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் அதிகரித்து காணப்படுகின்றன. பொது மக்கள் தமது இருப்பிடங்கள் வசிப்பிடப் பகுதிகளை சுத்தம் செய்து துப்பரவாக்கி டெங்கு நுளம்பு பெரு

15

## ஆண்கள் 28 பேர் உட்பட மேலும் 48 பேர் கொரோனாவால் மரணம்!

*கொழும்பு, ஜூலை 20*

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக ஆண்கள் 28 பேர் உட்பட மேலும் 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் நேற்று முன் தினம் இவ்வாறு மேலும் 48 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

15

## 300 டெல்டா தொற்றாளர்கள்!

*கொழும்பு, ஜூலை 20*

சமூகத்தில் 300 டெல்டா தொற்றாளர்கள் இருக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது மிகவும் எச்சரிக்கை மிக்கதும் அபாயம் மிக்கதுமான நிலைமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த தொற்றாளர்கள் நாட்டில் ஒரு பிரதேசத்தில் மாத்திரமின்றி பல இடங்களிலும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு, காலி,

15

## 2/3 பெரும்பான்மையுடன் நாங்கள் பிரேரணையை தோற்கடிப்போம்!

### ரோஹித அபேகுணவர்த்தன சவால்

*கொழும்பு, ஜூலை 20*

எதிரணியினரால் கொண்டுவரப்பட்டுள்ள எரிசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்போம் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர்



இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சிக் காலத்

15

## 1,487 பேருக்கு நேற்று தொற்று

*கொழும்பு, ஜூலை 20*

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,487 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 86 ஆயிரத்து 419 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 61 ஆயிரத்து 848 ஆக

15

## குடாநாட்டில் நேற்றும் இருவர் கொரோனோவால் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 20*

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் நோயினால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தீவகம் வேலணையைச் சேர்ந்த சேர்ந்த 84 வயதுடைய ஆண் ஒருவரும், தெல்லிப்பழையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 115 பேர் கொரோனா நோயினால் உயிரிழந்துள்ளனர். (இ - 03)

## விடுதலைப் புலிகளின் அச்சம் இலங்கையில் நீங்கவில்லை!

### அமைச்சர் வீரசேகர கூறுகின்றார்

*கொழும்பு, ஜூலை 20*



இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சம் இன்னமும் நீங்கவில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீர சேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் முயற்சியில் புலத்திலுள்ள முன்னாள் புலி உறுப்பினர் கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு இங்கிருக்கும் சிலர் துணை போகின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கு இளை ஞர்கள் சிலர் நாட்டின் சட்டதிட்டங்களை அறியாது தாம் நினைத்தபடி

15

## நாட்டை முடக்குவது குறித்து எந்த தீர்மானமுமே இல்லை

### கொரோனாவுடன் வாழப் பழகவேண்டும் என்கிறார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

*கொழும்பு, ஜூலை 20*

எதிர்வரும் விடுமுறை நாட்களில் நாட்டை முடக்குவதற்கு எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை என ஆரம்ப சுகாதார சேவைகள் தொற்று நோய்கள், கோவிட் 19 நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

மக்கள் கொரோனா வைரஸ் தொற்றுடன் தமது இயல்பு வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு பழக வேண்டும் என அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை சந்தித்து பேசியிருந்தனர்.

கூட்டமைப்பின் சார்பில் அவர்கள் நிச்சயம் பேசியிருக்க முடியாது. அவர்கள் சொல்வதையே கூட்டமைப்பின் தலைமை - அதுதான் நமது தமிழ் அரசுக் கட்சித் தலைமை கண்டுகொள்வதில்லை.

திலீபனின் நினைவு தினத்திற்கு அரசாங்கம் தடைவிதித்ததைத் தொடர்ந்து அந்த விவகாரத்தை எப்படிக் கையாள்வது என்பதை முடிவுசெய்வதற்காக முதலில் தமிழ் அரசுத் தலைவர் மாவை சேனாதிராசா, இந்த தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு பொது முடிவுக்கு வர முயன்றார். அந்த முயற்சியில் அவரால் வெற்றியும் பெறமுடிந்தது.

ஆனால், அந்த ஒற்றுமை முயற்சி பின்னரும் தொடர்ந்து தமிழ் தேசியப் பேரவை ஒன்றை அமைக்கவேண்டும் என்ற முடிவு வரை நீண்டு வந்தது.

ஆனால், அது அத்துடன் முடிந்துபோனதற்கு காரணத்தைக் கண்டறிய ஒன்றும் ஆராய்ச்சி தேவையில்லை.

கூட்டமைப்பையே ஒரு நிர்வாக கட்டமைப்பாக மாற்றுவதற்கு விம்பாத தமிழ் அரசுக்கட்சி, கூட்டமைப்பிற்கு புறம்பாக இன்னுமோர் அமைப்பை உருவாக்க ஒத்துழைக்கும் என்று யாராவது நம்பினால் அது தமிழ் அரசின் தவறு இல்லைத்தானே.

இப்போது திடீரென்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இந்த ஒற்றுமை முயற்சியை தொடங்கியதோடு, அதற்காக மெய்நிகர் மாநாடு ஒன்றுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஏன் அப்படியோர் ஆசை அவருக்கு திடீரென்று வந்தது என்பதை குறித்து ஆராய முற்பட்டபோது, ஒரு நண்பர் கோபத்துடன் சொன்னார்: "எல்லாம் நீர் தான் ஐசே காரணம்" என்று. எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பாராளுமன்றத்திற்கும் செல்ல முடியாத அளவிற்கு உடல்நலம் பாதிக்கப்பட்டபோது, கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் பதவிக்காவது ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்றும், அதற்கு செல்வம் பொருத்தமானவர் என்றும் ஊர்க்குருவி எழுதப்போக, அவருக்கு தலைவர் ஆசை வந்துவிட்டது." என்று முடித்தார் அந்த நண்பர்.

கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராக இருப்பவர் சம்பந்தன். ஆனால், அவருக்கு பின்னர் அந்தப் பதவிக்கு, கூட்டமைப்பின் ஆரம்பம் முதல் இன்றுவரை தொடர்ந்து எம்.பியாக இருப்பவர் செல்வம். அதனால் அவர் நியமிக்கப்படலாம் என்று எழுதியதற்காக அவர் தமிழர் தலைவராகிவிட விரும்பினால் அது ஊர்க்குருவியின் தவறில்லைத்தான்.

ஆனால், ரெலோ சொல்வதுபோல தமிழ் மக்கள் இன்று சந்திக்கும் நெருக்கடிகளை எவ்வாறு அணுகுவது என்பதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்கிடையே ஒற்றுமைப்படவேண்டும் என்று சொல்லும் ரெலோ முதலில் செய்யவேண்டியது என்ன?

ஒற்றுமை என்பதில் கூட இன்னமும் எதில் ஒற்றுமைப்படுவது என்பதில் அவர்களுக்கு தெளிவிருப்பதாக தெரியவில்லை. என்னென்ன விடயங்களில் நாம் ஒற்றுமையாக செயல்படவேண்டும்?

வடக்கில் வீதிகளை போடுவது, இராணுவத்தினரின் வாகனங்கள் ஓடித்திரிவதற்குத்தான் என்று விக்னேஸ்வரன் கூறுவதுண்டு. அப்படியெனில் வீதிகளை அமைக்கும் போதும் அதனை எதிர்ப்பதா?

இப்படி பல சிக்கல்கள் உண்டு. எனவே அதுகுறித்து ஒரு தெளிவான தயாரிப்பு முதலில் ரெலோவிடமும் புளொட்டிடமும் இருக்கவேண்டும்.

ஒரு வீட்டில் வாழை, குலையுடன் கட்டியிருந்தால், அதன் அர்த்தம் அந்த வீட்டில் ஏதோ வைபவம் நடக்கின்றது என்பதுதான். எனவே, வீதியால் போய்க்கொண்டிருக்கும் நாம் அந்த வீட்டுக்குப் போய் அவர்களின் துன்பத்திலோ அல்லது இன்பத்திலோ பங்குகொள்வதுபோல, தலைவர்களின் வீடுகளுக்குள் நுழைந்து, ஒற்றுமை பற்றி பேசுவது எந்த வகையிலும் பயனைத்தரப்போவதில்லை.

தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

அதனை இந்தப் பத்தியிலும் பலதடவை முன்வைத்திருக்கின்றோம்.

எனவே இந்த ஒற்றுமையை விரும்பும் ரெலோவும் புளொட்டும் முதலில் எந்த விடயத்தில் ஒன்றித்து செய்படுவது என்பதை தங்களுக்குள் பேசி தீர்வுகாணவேண்டும். அந்த விடயங்களில் அவர்களின் கருத்தோடு முதலில் தமிழ் அரசுக் கட்சி பயணிக்க தயாராக இருக்கின்றதா என்பதை அறியவேண்டும்.

அதைவிடுத்து எந்தவித திட்டமிடலும் இல்லாமல் இதுபோன்ற சந்திப்புக்களை நடாத்துவது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற மற்றுமொரு முயற்சியாகவே முடியும்.

**- ஊர்க்குருவி**

# ஓகஸ்ட் மாத இறுதியில் பாடசாலைகள் திறப்பு

## கல்வி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஜுலை 20

சுகாதார அமைச்சின் அனுமதியுடன், திட்டமிட்டபடி, எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் பாடசாலைகளை மீள திறக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைளினதும் கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் முகமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில் மேல் மாகாணத்தில் நேற்று வரை, 97 சதவீதமான ஆசிரியர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

தென் மாகாணத்தில் 83 சதவீதமானோருக்கும் ஊவா மாகாணத்தில் 68 சதவீத மானோருக்கும் வடமேல் மாகாணத்தில் 58 சதவீத மானோருக்கும் வடக்கு மாகாணத்தில் 57 சத வீதமான ஆசிரியர்களுக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள் ளன என அவர் குறிப்பிட்டார்.

# புங்குடுதீவு மகா வித்தியாலயத்தை கல்லூரியாக்க பரிந்துரை!

யாழ்ப்பாணம், ஜுலை 20

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை மத்திய கல்லூரியாக தரம் உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது குறித்த பரிந்துரைக் கடிதத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் யாழ்.மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதனுக்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரியவருகிறது.

வடக்கில் பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பாடசாலையை தரம் உயர்த்துவதற்கான பரிந்துரை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# பிரேரணைக்கு எதிராக 155 வாக்குகள்

கொழும்பு, ஜுலை 20

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 155 வாக்குகள் விழக்கூடும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தின்போதும் நான் வெளியிட்ட தகவல் இறுதியில் நிரூபணமானது. எனவே, தற்போது கூறும் கருத்தும் உண்மை என்பது இன்று மாலை தெரியவரும்.

எதிரணியிலுள்ள முக்கிய பிரமுகர் ஒருவரும் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளார் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

## கல்வி TV CHANNEL-1 — 20.07.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## கல்வி TV CHANNEL - 2 — 20.07.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
20.07.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மாடு அறுப்பு (தடை) அரசியல்

இலங்கையில் மாடுகள் உணவுக்காக கொல்லப்படுவதை தடுக்கும் சட்டமூலம் தொடர்பில் ஒரு வருடத்திற்கு முன்பதாகவே விவாதிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான அறிப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே வெளியிட்டிருந்தார். இதனை இலங்கையிலுள்ள பல்வேறு இந்து அமைப்புக்களும் வரவேற்றிருந்தன. ஆனால், இந்த விடயத்தை முஸ்லிம் கட்சிகளும் அமைப்புக்களும் கடுமையாக ஆட்சேபித்திருந்தன. முஸ்லிம்களை இலக்கு வைத்தே அரசாங்கம் இதனை திட்டமிட்டு மேற்கொள்வதாக அவர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அரசாங்கம் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்த விடயத்தை மீண்டும் கையில் எடுத்திருக்கின்றது. இறைச்சிக்காக மாடு அறுப்பதை தடுக்கும் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபை நிர்வாகத்திற்கு மாடு அறுப்பதை தடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த சட்ட மூலம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையை பொறுத்தவரையில் மாடு அறுக்கும் தொழிலை முஸ்லிம்களே மேற்கொண்டு வருகின்றனர். மாட்டு இறைச்சியை நன்கொடையாக வழங்கும் மத நடைமுறை ஒன்றும் அவர்களிடம் இருக்கின்றது. அதனை குர்பான் கொடுப்பது என்று அழைப்பார்கள். இந்த நிலையில் மாடு அறுப்பது சட்டத்தின் வழியாக தடுக்கப்பட்டால், முஸ்லிம்களின் மாடு அறுக்கும் தொழில் நிரந்தரமாக முடிவுக்கு வரும்.

உண்மையில் இது முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கையா? இதன் பின்னணி என்ன? மாடு அறுப்பதை தடுப்பது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ கூறியபோது, இது இந்தியாவின் மத்தியிலுள்ள பி.ஜே.பியை திருப்திப்படுத்துவத்கான ஒரு நகர்வு என்று சிலர் கூறினர். மோடி அதிகாரத்திற்கு வந்த பின்னர், இந்தியாவிலும் மாடு அறுப்பது தடுக்கப்பட்டிருக்கின்றது. பி.ஜே.பியின், மாடு அறுப்பு தடுப்பிற்கு பின்னால், அதன் இந்துத்துவா கொள்கை இருக்கின்றது. இந்தியா, இந்துக்களின் நாடு என்பதை வலியுறுத்துவதன் மூலம், இந்திய மக்களை பி.ஜே.பியின் பக்கம் வைத்துக் கொள்ளும் ஓர் உக்தியாகவே அதனை நோக்க வேண்டும்.

அவ்வாறாயின் இலங்கையின் இதன் பெறுமதி என்ன? இலங்கை ஒரு பௌத்த நாடு. பௌத்தம் ஜீவகாருண்யத்தை போற்றும் ஒரு தத்துவம். இதனை வலியுறுத்தும் நோக்கிலேயே ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன அரசாங்கம் மாடு அறுப்பு தடையை முன்வைக்கின்றது. இந்தியாவில் மாடு அறுப்பு தடுக்கப்பட்டமையும், இலங்கையில் மாடு அறுப்பு தடுக்கப்படுவதும் முற்றிலும் உள்ளூர் அரசியல் தொடர்பானது. இதன் மூலம் தங்களின் உள்ளக அரசியலை பலப்படுத்திக் கொள்ளவே குறித்த கட்சிகள் முயற்சிக்கின்றன.

இந்த முடிவால் நிச்சயம் பௌத்தர்கள் மகிழ்சியடைவர். இது தங்களுக்குரிய அரசாங்கம்தான் என்பதை உணர்வர். இன்னொரு வகையில் வடக்கு, கிழக்கில் இந்துக்களின் செல்வாக்கை தூக்கி நிறுத்த வேண்டுமென்று எண்ணுபவர்களும் இதனால் மகிழ்சியடைவர். இதனால் பாதிக்கப்படும் சமூகம் என்றால், அது நிச்சயம் முஸ்லிம்கள் மட்டும்தான் ஏனெனில், அவர்களுக்கு இது தொழில். பெரும் வருமானத்தை தரும் வியாபாரம்.

நான் ஒரு பௌத்த – சிங்கள தலைவன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்திருக்கும் நிலையில், இவ்வாறான விடயங்கள் எவையும் ஆச்சிரியமானதல்ல. ஒரு பௌத்த – சிங்கள தலைவன், ஜனாதிபதியாக இருக்கின்ற போது, பௌத்த நாட்டில் எவ்வாறு மாடுகளை கொல்ல முடியும்? மாடு அறுப்பு தடைக்கு பின்னாலுள்ள அரசியல் இதுதான்.

# சித்தரின் மாகாணசபை முறைமை குறித்த சித்தாந்தம்

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் களின் அரசியல் அபிலாஷைகளை தீர்த்து வைப்பதற்கு மாகாண சபையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறையே சாத்தியமானதாக இருக்குமென்று தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் இருதினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோதே சித்தார்த்தன் இதனை குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை - இந்திய இராஜதந்திரிகள் மற்றும் அனுபவஸ்தர்களான இரு நாடுகளினதும் அரசியல்வாதிகள் மட்டத்தில் அறிமுகமானதே இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக்கொண்ட மாகாண சபை அமைப்பாகும்.

1987ஆம் ஆண்டில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமேயானால் இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்பது உறுதியாகியிருக்கும்.

ஆனால், தங்கத் தட்டில் தந்தது போல வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை இல்லாதொழித்து தமிழர்களுக்கு கிடைக்கக் கூடிய அரசியல் தீரவுக்கான அனைத்து வாய்ப்புகளையும் இல்லாதொழித்த பெருமை தமிழீழ விடுதலைப் புலிகளையே சாரும்.

**மன்றாட வேண்டிய நிலை**

வெறுமனே இராணுவ அணுகுமுறைகளில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்ததோடு அரசியல் அணுகுமுறைகளைப் புறந்தள்ளிய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய தாக்கம் அரசியல் தீர்வுக்காக இந்தியாவிடமும் இலங்கையிடமும் சர்வதேச சமூகத்திடமும் மன்றாட வேண்டிய நிலைக்கு வடக்கு - கிழக்கு தமிழர்களை கொண்டு சென்றுள்ளது. இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை ஒரு சமஷ்டி முறையை தழுவியதாக அமைந் திருந்தது.

பொலிஸ் அதிகாரத்துடன் காணி மற்றும் பல்வேறு சுயாட்சி முறைக்கான அம்சங்களை இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை கொண் டிருந்தது. ஆனால், ஆயுத பலத்துடனிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையை ஏற்றுக் கொண்டிருக்கும் பட்சத்தில் இன்று சமஷ்டி அமைப்பைக்கூட ஐக்கிய இராச்சியத்தில் ஸ்கொட்லாந்து நிர்வாக முறையை தழுவிய தாக ஓர் அரசியல் தீர்வை பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

ஆனால், கடந்த பத்துவருட காலத்தில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அரசியல் தீர்வென்பது ஒரு "கானல் நீராக"வே மாற்றங் கண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முக்கியத்துவத்தை மீளவும் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிடம்கூட தமிழ் தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுலாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றது.

**இந்திய நிலைப்பாடு**

ஆனால், இந்தியா தனக்கு இலங்கை விவகாரத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை கவனத்திலெடுத்த நிலையில் "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை பக்கம் போகாது" என்பது போலவே காணப்படுகின்றது.

அதேவேளை மறுபுறத்தே இலங்கையுடனான தனது பிராந்திய நலனை மட்டுமே கவனத்தில் கொண்டதாக இந்தியா தனக்கு வேண்டிய தருணங்களில் இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் பற்றி பிரஸ்தாபிப்பதை தனது இராஜதந்திர அணுகுமுறையாகக் கொண்டுள்ளது.

இத்தருணத்திலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் மாகாணசபை நிர்வாகத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு கட்டத்திலும் மாகாணசபை நிர்வாக முறையை இழந்து விடக்கூடாதெனவும் , அந்த நிர்வாக முறையையும் பறிகொடுக்கும் பட்சத்தில் மீளவும் பூச்சியத்திலிருந்தே அனைத்தையும் ஆரம்பிக்க வேண்டி வருமெனவும் த.சித்தார்த்தன் அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டுள்ளார்.


1987ஆம் ஆண்டு மாகாண சபை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது இருந்த இருந்த தமிழ் அரசியல் கட்சிகளைவிட இன்று வடக்கு-கிழக்கு தமிழ் அரசியலில் நிறையவே அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன.

**சி.வி.விக்னேஸ்வரன்**

வட மாகாண சபையின் முதலமைச்சராக தமிழ் தேசிய கூட்டமைப்பினால் நிறுத்தப்பட்ட முன்னாள் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்கூட தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்று தமக்கென தமிழ் மக்கள் தேசிய கூட்டணி என்ற அரசியல் கட்சியை ஸ்தாபித்துள்ளார். எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வவுனியாவில் தமது புளொட் அமைப்பின் மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தியபோதே மாகாண சபை நிர்வாகத்தின் முக்கியத் துவத்தை குறிப்பிட்டுள்ளார்.

1987-ஆம் ஆண்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்த தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் மட்டுமல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கம் உட்பட முக்கியமான வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தவைர்கள் மற்றும் மறைந்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, இந்திய அமைதி காக்கும் படையைச் சேர்ந்த 1,155 இந்திய இராணுவ வீரர்களும் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையின் வெற்றிக்காக தமது இன்னுயிரை நீத்த நிலையில் மீளவும் இணைந்த மாகாண சபையின் உருவாக்கத்துக்காக அரசியல் ரீதியான அழுத்தங்களை கொடுக்க வேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுலை - 20 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆடி 04
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : ஏகாதசி

## இன்றைய ராசிபலன்

20.07.2021

**மேடம்**
பிறரிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. பேச்சைக் குறைக்கவும். தர்மம் செய்வதிலும் தெய்வப் பணிகளிலும் பங்கேற்று மகிழ்வீர்கள். பிள்ளைகள், வாழ்க்கைத்துணைவரால் நன்மை காண்பீர்கள்.

**இடபம்**
புதிய சாதனை செய்வதற்கான சந்தர்ப்பம் கூடி வரும். உறவினர் ஒத்துழைப்பார்கள். மனத்தில் தன்னம்பிக்கை கூடும். முயற்சி பலிக்கும். குடும்பம் சீர்பெறும். உழைப்பு வீண்போகாது.

**மிதுனம்**
முக்கிய பிரச்னைகளை விழிப்புடன் அணுகுவது அவசியம். சுபச்செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. நீண்ட நாள் கவலைகள் நீங்கும். குடும்ப விஷயங்களில் அக்கறை தேவை. பேச்சால் நன்மை வரும்.

**கடகம்**
பேச்சில் அதிக கவனம் தேவை. லட்சுமி கடாட்சம் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடு பட்டாவது வெற்றி காண்பீர்கள். உடன் பிறப்பால் ஆதாயம் கூடும். வீண் கவலைகள் மறையும்.

**சிம்மம்**
தாயால் அனுகூலம் உண்டு. புதிய வீடு, வாகனம் சேர்க்கை உண்டாகும். குழந்தைகளின் செயல்கள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். சொத்து, பத்திரம் விவகாரங்களில் கவனம் தேவை.

**கன்னி**
கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். பதற்றம் வேண்டாம். கணவன், மனைவிக்குள் அன்பு மேம்படும். பணிமாற்றம் ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்களால் வருமானம் கூடும். நண்பர்கள் உதவுவர்.

**துலாம்**
தந்தை உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பார். பணி விஷயமாக வெளியூர்ப் பயணங்கள் செல்ல வேண்டியிருக்கும். வீட்டிலும் பணியிலும் மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருட்சிகம்**
மன பலத்தால் எதையும் சாதிக்கும் வலிமை அதிகரிக்கும். கஷ்டங்களை எல்லாம் ஒதுக்கி வைத்து நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உற்சாகமுடன் செயல்பட்டு மகிழ்ச்சி காண்பீர்கள்.

**தனுசு**
வாழ்க்கைத் துணையின் அன்பும் ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். மனதிலும் உற்சாகம் மேலோங்கும். சீரிய அணுகு முறையால் கடினமான பணியைக் கூட எளிதாக முடிப்பீர்கள்.

**மகரம்**
உற்சாகமுடன் செயல்படுவீர்கள். சில முடிவுகள் எடுப்பதில் குழப்பம் ஏற்படும். வாழ்க்கைத் துணையோடு கருத்து வேறுபாடு விலகும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்**
சிக்கலான பிரச்னைகளை பொறுமையுடன் கையாள்வது அவசியம். பிரச்னை வந்தாலும் உடல்நிலை குறித்த கவலை வேண்டாம். சிகிச்சையில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும்.

**மீனம்**
சற்றே அலைச்சல் ஏற்பட்டாலும் அனுகூலமான பலன் உண்டாகும். எதில் ஈடுபட்டாலும் உற்சாகம் குறையாது. சுபச்செலவு அதிகரிக்கும். மனதில் பட்டதை வெளிப்படையாக பேச வேண்டாம்.

# இலங்கை மாணவர்களுக்கு மருத்துவ படிப்புக்கு இடம் ஒதுக்க வேண்டும்

## முதலமைச்சரிடம் நெடுமாறன் வேண்டுகோள்

சென்னை, ஜுலை 20

மருத்துவப்படிப்புக்கு இலங்கை அகதி மாணவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும்என முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மருத்துவப் படிப்பில் ஈழ அகதி மாணவர்களுக்கு இடம்ஒதுக்குவது குறித்து பழ.நெடுமாறன் தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

“தமிழ் நாட்டில் ஒரு இலட்சம் பேருக்கு மேல் ஈழத்தமிழ் அகதிகள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் பிள்ளைகள் பலர் தமிழ் நாட்டிலேயே பிறந்தவர்கள் ஆவர். இந்தப் பிள்ளைகள் முகாம்களின் அருகே உள்ள அரசுப்பள்ளிகளில் படித்து வருகின்றனர். மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்பதற்காக நீட் தேர்வு எழுத அவர்கள் விரும்பிய போது அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக செய்திகள் வருகின்றன.



உடனடியாக தமிழக முதல்வர் இப்பிரச்சினையில் தலையிட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் குறிப்பிட்ட அளவுக்கு இடம் அவர்களுக்கு ஒதுக்கி நீட் தேர்வு எழுதவும் அவர்களை அனுமதிக்க வேண்டுமென வேண்டிக்கொள்கின்றேன்” என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# இந்திய கூட்டாட்சிக் கொள்கைக்கு வேட்டு வைக்க முனைகின்றீர்கள்!

## மத்திய அரசைக் கடுமையாகச் சாடிய வைகோ

புதுடில்லி, ஜுலை20

இந்தியா ஒரு ஆபத்தான பாதையில் சென்று கொண்டு இருக்கின்றது. ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அசைக்கின்ற விதத்தில், கூட்டாட்சிக் கொள்கைக்கு வேட்டு வைக்க முனைகின்றீர்கள் என்று வைகோ மத்திய அரசை கடுமையாக விமர்சித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில், மதிமுக பொதுச் செயலாளரும் ராஜ்ய சபா எம். பியுமான வைகோ, இவ்வாறு கூறியதுடன், மத்திய அரசை கடுமையாக விமர்சித்து பேசியுள்ளார். ஆனாலும், கூட்டத்தின் முடிவில் பிரதமர் நரேந்திர மோடி, வைகோவின் அருகே வந்து நலம் விசாரித்தது அரசியல் களத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது.



டில்லி பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அரங்கத்தில், நேற்று முன்தினம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தை பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி ஏற்பாடு செய்து இருந்தார். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமை வகித்தார். மாநிலங்கள் அவை முன்னவர் பியுஷ் கோயல் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சி நிறைவு பெறுகின்ற வேளையில், பிரதமர் நரேந்திர மோடியும் வந்து பங்கேற்றார்.

இந்த கூட்டம் முடிகின்ற வேளையில் பேசிய பிரகலாத் ஜோஷி கட்சிகளின் உறுப்பினர்களைப் பார்த்து, குறைந்த நேரம் பேசுங்கள் என்று சொன்னபோது அதற்கு வைகோ எதிர்ப்புத் தெரிவித்தார். “இந்தியா ஒரு ஆபத் தான பாதையில் சென்று கொண்டு இருக்கின்றது. ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அசைக்கின்ற விதத்தில், கூட்டாட்சிக் கொள்கைக்கு வேட்டு வைக்க முனைகின்றீர்கள். சமூக நீதியை, சவக்குழிக்கு அனுப்ப முயற்சிக்கின்றீர்கள்” என அவர் கூறினார்.

கூட்டம் முடிந்தவுடன், வைகோ அருகில் வந்த பிரதமர் மோடி, வைகோடம் உடல் நலம் விசாரித்தார். மத்திய அரசை வைகோ கடுமையாக விமர்சித்துப் பேசினாலும், கூட்டம் முடிந்தவுடன், வைகோ அருகில் வந்த பிரதமர் மோடி, வைகோவின் உடல் நலம் குறித்து விசாரித்துள்ளார்.

# தமிழக சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும்

## கமல்ஹாசன் வலியுறுத்தல்

சென்னை, ஜுலை 20

தமிழக சட்டப் பேரவை நிகழ்வுகளை முழுமை யாக நேரடி ஒளி பரப்பு செய்ய தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “வெளிப் படையான அரசு நிர்வாகம், பங்கேற்பு ஜனநாயகம் ஆகியவை மக்கள் நீதி மய்யம் தொடங்கிய நாளில் இருந்தே நாங்கள் வலியுறுத்தி வரும் அம்சங்கள். சட்டப்பேரவையின் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்வது மக்கள் பிரதிநிதிகள் பொதுப் பிரச்சினைகள் மீது நிகழ்த்தும் விவாதங்களைச் சாமானியனும் அறிந்துகொள்ள உதவக்கூடியது.



சட்டப்பேரவை நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்ப வேண்டுமென கோரி, 2012இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கை அ.தி.மு.க. அரசு சாக்குப்போக்கு சொல்லி நிலுவையில் போட்டு விட்டது.

நாங்கள் ஆட்சிக்கு வந் தால் சட்டப்பேரவை நிகழ் வுகளை நேரடி ஒளிபரப்பு செய்வோம் என, தன் தேர்தல்வாக்குறுதியில் திமுக அறிவித்திருந்தது. ஆனாலும், முதல் சட்டப்பேர வைக் கூட்டத்தொடரின்ஆளுநர்உரையின் முழு நிகழ்வையும் நேரடி ஒளி பரப்பு செய்யவில்லை.

இந்திய பாராளுமன்றத் தின் நிகழ்ச்சிகள் கடந்த 200ஆம் ஆண்டு முதல் நேரடியாக ஒளிபரப்பாகின்றன. கேரள சட்டப்பேரவை நிகழ்வு கள் இணைய வழியில் வெப் ஸ்ட்ரீம் செய்யப்படுகிறது. இதற் கென்றே தனியாக ஒரு யூடியூப் சேனலும் உள்ளது” எனத் தெரி வித்துள்ளார்.

# இந்த அரசும் மக்களால் காணாமல் ஆக்கப்படும்

## சபையில் வினோ எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜுலை 20**

**தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதை போல தற்போதைய அரசாங்கமும் விரைவில் மக்களால் காணாமல் ஆக்கப்படும் என தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம்.**

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிக்கும்போது, பாராளுமன்றத்தின் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடப்படவில்லை. அப்படி கலந்துரையாடப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

எனினும், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு காரணமான எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதை ஆதரிக்க வேண்டிய நிலையில் உள்ளது-என்றார்.



# தரம் 5 புலமைப்பரிசில் நவம்பர் 14 ஏ.எல். நவ.15 முதல் டிசெ. 10 வரை

கொழும்பு, ஜுலை 20

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நவம்பர் 14ஆம் திகதியும் மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நவம்பர் 15ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையும் நடைபெறும் என்று கல்வி அமைச்சர், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 4ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 31ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டது.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இல்லாததால் பாடத்திட்டங்கள் முறையாக முடிக்கப்படவில்லை என்ற நிலையில் பரீட்சைகளின் திகதிகள் மறு ஆய்வு செய்யப்பட்டு பிற்போடப்பட்டுள்ளன.

# யாழ். இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கொடிதுவக்கு நேற்றுக் காலை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா கொழும்பு இராணுவ தலைமையகத்துக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ள நிலையில், கொழும்பு இராணுவக் கட்டளை தலைமையகத்தில் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு நேற்று காலை சுபவேளையில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பலாலி இராணுவக் கட்டளை தலைமையகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். (அ-03)



# தடுப்பூசி பெற்றுக்கொண்ட வைத்தியருக்கு கொரோனா!

கொழும்பு, ஜுலை 20

பதுளை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வைத்தியர் கொரோனா வைரஸ் தொற்றுக்கான இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவரென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பதுளை மாவட்ட இணைப்பாளர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நிலையில், அந்த வைத்தியருடன் தொடர்பில் இருந்த ஏனையவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.



# காட்டுயானை தாக்கி இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுலை 20

அனுராதபுரம் - கஹடகஸ்திகிலிய பகுதியில் காட்டு யானை தாக்கி இருவர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 61 மற்றும் 63 வயதான இருவரே பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித-யானை மோதலால் ஆண்டுதோறும் சராசரியாக 300 யானைகள் கொல்லப்படுகின்றன. அதேநேரம் 100 பேர் இறக்கின்றனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

# தரம் ஒன்று அனுமதிக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு, ஜுலை 20

2022ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விண்ணப்ப முடிவு திகதி ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 70,200 பைசர் தடுப்பூசிகள் நேற்று இலங்கை வந்தன

கொழும்பு, ஜுலை 20

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பைசர் தடுப்பூசியின் 70,200 தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்தன.

கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் இந்த தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்தன.

விசேட குளிரூட்டலின் அடிப்படையில் அந்த தடுப்பூசிகள் கொழும்பு மத்திய சேகரிப்பு நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற மீசாலை இளைஞன் நீரில் மூழ்கி மரணம்!

யாழ்ப்பாணம், ஜுலை 20

பூநகரி கௌதாரிமுனை கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நண்பர்களோடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கௌதாரி முனைக்கு சுற்றுலா சென்ற இளைஞர்கள் அங்குள்ள கடலில் குளித்துள்ளனர். இதன்போதே இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கியுள்ளார்.

கடலில் மூழ்கிய இளைஞனை நண்பர்கள் ஆபத்தான நிலையில் மீட்டு பூநகரி வைத்தியசாலைக்கு கொண்ட சென்றபோது வழியில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மீசாலையைச் சேர்ந்த 30 வயதான தபாலக உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள் வர்த்தகர் உட்பட வாழைச்சேனையில் மூவர் சிக்கினர்

மட்டக்களப்பு, ஜுலை 20

வாழைச்சேனையில் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் உட்பட மூன்று நபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, கும்புறுமூலை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் பிரபல போதை வியாபாரி உட்பட மூன்று நபர்களை கைது செய்துள்ளனர்.



குறித்த நபர்கள் மட்டக்களப்பு ஜெயந்திபுரம், இருதயபுரம், செட்டிப்பாளையம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 100 கிராம் ஐஸ் போதைப்பொருளும், போதைப் பொருளைக் கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட சொகுசு காரும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட போதைப் பொருள் வர்த்தகர், மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பிரதேசங்களுக்கும் ஐஸ் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

# மோட்டார் சைக்கிள் தீக்கிரை

கிளிநொச்சி, ஜுலை 20

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில், கடந்த சனிக்கிழமை இரவு நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

முன்பகை ஒன்றின் காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்காலாம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவில்லை.

ஈழநாடு



# வடக்கில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்!

## யாழ். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 20

**"பருத்தித்துறை மற்றும் ஏனைய சில பகுதிகள் வடக்கு மாகாணத்தில் முடக்கப்பட்டுள்ளன. அந்த பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின்படி சில வேலைத்திட்டங்கள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. எனவே பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத் துழைப்பை இந்த காலப்பகுதிகளில் வழங்கவேண்டும்."**

-இவ்வாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அரசினால் வழங்கப்பட்ட ஓட்டோக்களை பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, யாழ். பொலிஸ் நிலையம் உட்பட ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கென 20 ஓட்டோக்கள் வழங்கியுள்ளோம்.

அதேபோல் காங்கேசன்துறை பொலிஸ்பிரிவுக்கும் 20 ஓட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஓட்டோக்கள் வழங்கப்பட்டமைக்கு அரசாங்கத்துக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். குறிப்பாக பொலிஸ் நிலையங்களில் இந்த வாகனப் பிரச்னையானது நீண்டகாலமாக காணப்பட்டது. அந்த வாகனப் பிரச்னைகளை தீர்க்கும் வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கொரோனா நிலைமை மற்றும் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க பொலிஸ் நிலையங்களில் வாகனத் தட்டுப்பாடு பெரும் பிரச்னையாக காணப்பட்டது. அந்த பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு கிட்டியுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் 2 ஓட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் புதிதாக திறக்கப்பட உள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த ஓட்டோக்கள் வழங்கப்பட உள்ளன.

அதேபோல் எதிர்வரும் காலங்களில் பொலிஸாருக்கு மோட்டார் சைக்கிள் மற்றும் தேவையான வாகனங்கள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் பொலிஸ்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஓட்டோக்களை பாவிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதனை சரியான முறையில் நீண்ட காலம் பாவிக்கவேண்டும். பொதுமக்களுக்கான சேவை வழங்குவதற்கு வாகனங்களை பயன்படுத்தி பொலிஸ் உத்தியோகத்தர்கள் திறமையாக செயற்படவேண்டும்.

தற்போது நாடு முழுவதும் கொவிட் நிலைமை சற்று அதிகமாக காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாட்களில் சில பகுதிகள் முடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

நான் ஏற்கனவே தென் மாகாணத்தில் தான் கடமையாற்றியிருந்தேன் வடக்கு மாகாணத்தில் நான் கடமை ஏற்ற பின் பருத்தித்துறை மற்றும் ஏனைய சில பகுதிகள் வடக்கு மாகாணத்தில் முடக்கப்பட்டுள்ளன. அந்த பகுதி களில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின்படி சில வேலைத்திட்டங்கள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. எனவே பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பை இந்த காலப்பகுதிகளில் வழங்கவேண்டும்-என்றார். (அ-03)

## நாட்டில் 56 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஜ/லை 18 ஆம் திகதிவரை 56 லட்சத்து 75 ஆயிரத்து 329 பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ராசெனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கொவிஷீல்ட், சீனாவின் தயாரிப்பான சினோபார்ம், ரஷ்ய தயாரிப்பான ஸ்புட்னிக்-5, பைசர், மொடர்னா ஆகிய தடுப்பூசிகள் இலங்கையில் மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸை பெற்றுக்கொண்டவர்களில் 3 லட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூலை 18 ஆம் திகதிவரை 45 லட்சத்து 34 ஆயிரத்து 165 பேருக்கு சினோ பார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 12 லட்சத்து 86 ஆயிரத்து 215 பேர் பெற்றுள்ளனர். ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 81 பேருக்கு அந்த தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 464 பேர் இரண்டாம் டோஸை பெற்றுள்ளனர்.

பைசர் தடுப்பூசி ஏற்றும் பணி ஜூலை 7 ஆம் திகதி ஆரம்பமானது. அதன்முதலாவது டோஸை நேற்றுவரை 46 ஆயிரத்து 753 பேர் பெற்றுள்ளனர். மொடர்னா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது. முதலாவது டோஸ் 10 ஆயிரத்து 88 ஆக அதிகரித்துள்ளது.

## நீர்வீழ்ச்சியில் விழுந்து மாயமான யுவதியை தேடும் பணி தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 20

279 அடி நீளமான தலவாக்கலை, டெவோன் நீர் வீழ்ச்சியில் விழுந்து காணாமற்போயுள்ள யுவதியை தேடும் பணி நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

தலவாக்கலை - லிந்துலை, லென்தோமஸ் தோட்ட பகுதியைச் சேர்ந்த 19 வயதான மணி பவித்ரா என்ற யுவதி நேற்று முன்தினம் மாலை நீர்வீழ்ச்சியில் விழுந்து காணாமல்போனார். நேற்று முன் தினம் மாலை முதல் தேடுதல் இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் இராணுவத்தின் உதவியுடன் மீண்டும் தேடுதல் இடம்பெற்றது.

## வவுனியாவில் விபுலானந்தர் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை 20

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 74 ஆவது நினைவு தினம் வவுனியா கண்டி வீதியில் உள்ள அவரது சிலைக்கு முன்பாக நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில். அடிகளாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து, விபுலானந்தர் தொடர்பான நினைவு பேருரையை வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவர் தமிழருவி சிவகுமாரன் ஆற்றியிருந்தார்.

நிகழ்வில் நகரசபைசெயலாளர், நகரசபைஉறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுஅமைப்புகள், என பலர் கலந்துகொண்டனர்.


## யாழ்.பொலிஸ் நிலையங்களுக்கு 40 ஓட்டோக்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு ஓட்டோக்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண பிரதம பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது. யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கலந்து கொண்டு பொலிஸ் நிலையங்களுக்கான ஓட்டோக்களை வழங்கினார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தி குற்றங்களை கட்டுப்படுத்தும் வகையில் பிரதமர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கென2000 ஓட்டோக்கள் பொதுமக்கள் பாதுகாப்பு





அமைச்சினால் பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப் பட்ட நிலையில்-

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கையளிக்கப் பட்ட 40 ஓட்டோக்களை பொலிஸ்நிலையங்களுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்மற்றும்யாழ். மாவட்ட பொலிஸ்நிலையங்களின் பொறுப் பதிகாரிகள் கலந்து கொண்டு தமக்குரிய ஓட்டோக்களை பெற்றுக்கொண்டனர்.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ்நிலையங்களுக்கு தலா இரண்டு ஓட்டோக்கள் நேற்று வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## முல்லைத்தீவு படைத்தளத்தில் 1996ஆம் ஆண்டு கொல்லப்பட்ட படையினருக்கு அஞ்சலி நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூலை 20

முல்லைத்தீவு படைத்தளத்தில் 1996 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 1169 படையினருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு முல்லைத்தீவு பாதுகாப்புப் படையினரால் முன்னெடுக்கபட்டது.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

1996 ஆம் ஆண்டு ஜூலை 18ஆம்,19 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு பகுதியில் உயிரிழந்த 1169 படையினர் நினைவாக முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் நினைவுத்தூபியில் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கை இராணுவப்பிரிவின் சிங்கறெஜிமன்ட், விஜயபாகு றெஜிமன் படைப்பிரிவை சேர்ந்த படைவீரர்களே 1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு படைத்தளத்தில் தமிழீழ விடுதலை புலிகளுடனான போரில் கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் நினைவாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் நினைவுத்தூபி அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் நினைவு நிகழ்வு நடைபெறுவது வழமை.

இவர்கள் நினைவாக 2010 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சிசிர பிலப்பிட்டிய உள்ளிட்ட படைத்தளபதிகள், அதிகாரிகள் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தியுள்ளனர்.

இதன்போது கொக்குளாய் விகாரையின் விகாராதிபதியினால் உயிரிழந்த படைவீரர்களுக்காக பிரித் ஓதி தானம் வழங்கப்பட்டதை தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

# மஹிந்தவின் நிதியமைச்சு பதவி பறிப்புக்கு எரிபொருள்களின் விலையேற்றம் காரணமா?

## மரிக்கார் எம்.பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஜூலை 20

நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடித்தாலும், மக்களிடமிருந்து ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிதியமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமைக்கு எரிபொருள் விலையேற்றமா காரணம் என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனாவினால் மக்களின் வாழ்வாதாரம் பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், எரிப்பொருட்களின் விலையை உயர்த்தி, எரிசக்தி அமைச்சர் உதயகம்மன்பில மேலும் மக்களை சிக்கலுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதற்கு ஆளும் தரப்பு உறுப்பினர்களே எதிர்ப்பினை வெளியிட்டுள்ள நிலையில், எரிபொருள் விலையேற்றத்துக்கு தான் காரணமில்லை என்றும், நிதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாகவே எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டதாகவும் அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்திருந்தார்.

அப்படியென்றால் ஆளும் தரப்பு உறுப்பினரான சாகர காரியவசம் உள்ளிட்டவர்கள் நிதியமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ மீதா குற்றம் சுமத்துகிறார்கள். இதற்காகத் தானா அவரது நிதியமைச்சுப் பதவியும் பறிக்கப்பட்டது? இவ்வாறான நாடகங்களை அறங்கேற்றி மக்களை முட்டாளாக்க முற்படக்கூடாது.

இந்த அரசாங்கம் எரிபொருளின் விலை சர்வதேச ரீதியாக குறைந்தபோதும்கூட, எரிபொருளின் விலையைக் குறைக்கவில்லை. அரசாங்கம் திரைமறைவில் ஒரு நாடகத்தையே அரங்கேற்றி வருவதாலேயே நாம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளோம்.

இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்தரப்பினர் தோல்வியடைச் செய்தாலும், மக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம்தான் இலங்கை வரலாற்றிலேயே மிகவும் மோசமான அரசாங்கமாக காணப்படுகிறது.

முடிந்தால் நிதியமைச்சராக பொறுப்பேற்றுள்ள பசில் ராஜபக்ஷ, எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றுமாறு நான் சவால் விடுக்கிறேன். தேர்தலொன்று இடம்பெற்றால் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க மக்கள் தயாராக உள்ளார்கள் - என்றார்.

# விழுந்த பட்டத்தின் நூலினால் விபத்து!

## தாயும், குழந்தையும் பலி

கொழும்பு, ஜூலை 20

பட்டத்தின் நூலில் சிக்கி மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் தாயும், குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தந்தையும், இன்னொரு பிள்ளையும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனி இரவு 8.20 மணியளவில் பூசா பிடிவெல்ல நிபுண கடற்படை தளத்திற்கு அருகிலுள்ள காலி-கொழும்பு பிரதான சாலையில் இந்த விபத்து நடந்துள்ளது.

அறுந்து வீழ்ந்திருந்த பட்டமொன்றின் நூல் வீதியை குறுக்கறுத்திருந்தது. அந்த வீதியால் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற குடும்பத் தலைவர், நூலில் சிக்கிய போது, கையால் அதனை அகற்ற முயன்றதாகவும், அப்போது நிலை தடுமாறி மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் தனது இரண்டு குழந்தைகள் மற்றும் மனைவியுடன் காலியில் இருந்து ரத்கமவிற்கு பெற்றோரை சந்திக்கச் சென்று கொண்டிருந்தார்.

34 வயதான தாயும், ஒன்றரை வயதான குழந்தையும் உயிரிழந்தனர்.

தந்தையும், ஆறு வயது மகனும் இலேசான காயங்களுடன் கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் சாரதி கொக்கல விமானப்படைத் தளத்துடன் இணைக்கப்பட்ட ஒரு சார்ஜன்ட் என பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறைச்சாலைக் காவலர் ஹெரோயினுடன் கைது!

திருமலை, ஜூலை 20

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை-மட்கோ, மஹமாயபுர பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஏ.துலாஜ் மதுசங்க எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைவாக குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 14 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறித்த நபர் திருகோணமலை சிறைச்சாலையில் கடமையாற்றி வரும் சிறைச்சாலை காவலர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், திருகோணமலை நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கடன்களை செலுத்த மக்களிடமே வரிகளை அரசு அறவிடவேண்டும்

## பிரதமர் வீட்டிலிருந்து எடுத்துவர இயலாது என்கிறார் அமைச்சர் பந்துல குணவர்தன

கொழும்பு, ஜூலை 20

சர்வதேச கடன்கள், தேசிய கடன்கள் அதற்கான வட்டிகளை செலுத்த பல பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. இவ்வாறான நிலையில் மக்களின் பக்கம் தீர்மானம் எடுக்க முடியாது. இந்த கடன்களுக்கான பணத்தையும் மக்களிடம் இருந்தே அறவிட வேண்டியுள்ளது. மாறாக பிரதமர் வீட்டில் இருந்து கொண்டுவர முடியாது என அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான முதல்நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். இதன்போது மக்களுக்கு சலுகைகள் வழங்குவதென்றாலும் அதனையும் மக்களின் வரிகளிலேயே பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் வரிகளின் மூலமாக 1,216 பில்லியன் ரூபா பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதே ஆண்டில் அரச துறை ஊழியர்களுக்கு கொடுப்பனவாக 1,015 பில்லியன் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வாறான நெருக்கடி நிலையிலேயே நாம் உள்ளோம். இதற்கு மேலாக அரச கடன்களை செலுத்த முடியாது. கடனுக்கான வட்டியை செலுத்த முடியாத நெருக்கடி நிலையிலேயே 2020 ஆம் ஆண்டில் இருந்து எதிர்கொண்டு வருகின்றோம்- என்றார்.



# “கம்மன்பிலவை வெளியேற்றுவோம்” கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

“எரிபொருள் விலையை உயர்த்திய கமன்பிலவை வெளியேற்றுவோம். நிவாரணத்தை குறைத்து நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசாங்கத்தை விரட்டுவோம்” எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை பாராளுமன்ற சுற்றுவட்ட வளாகத்தில் நடைபெற்றது.

இந்த போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை தாங்கியதோடு,ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள் உட்பட ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

தன்னிச்சையாக அதிகரித்த எண்ணெய் விலையை அரசாங்கம் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று கலந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஏகமனதாக கோரினர்.

# மன்னார் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு

மன்னார், ஜூலை 20

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார சேவைகள் பணியாளர்கள் மற்றும் பரிசோதகர்கள் ஆகிய தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கக்கோரி நேற்று திங்கட்கிழமை காலை வைத்தியசாலை வளாகத்தில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் தமக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு செம்ரெம்பர், நவம்பர் மற்றும் இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை மட்டுப்படுத்தி 60 மணித்தியாலங்கள் மாத்திரம் வழங்கியுள்ளனர்.

60 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக பணியாளர்கள் மேற்கொண்ட நேரங்களுக்கான கொடுப்பனவை இதுவரை காலமும் தமக்கு வழங்கவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக பல தடவைகள் எழுத்து மூலமாகவும் தொழிற்சங்க அடிப்படையிலும் பணியாளர்கள் ஒன்றிணைந்து வைத்தியசாலையில் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த 2 ஆம் திகதி குறித்த விடயம் தொடர்பில் கடிதம் ஒன்றை பணிப்பாளருக்கு அனுப்பி இருந்தோம்.கடந்த 9 ஆம் திகதிக்கு முன் சரியான முடிவை வழங்குமாறும், அவ்வாறு சரியான முடிவு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என தெரிவித்திருந்தோம்.

பணியாளர்களாகிய எங்களை வைத்தியசாலை நிர்வாகம் தொடர்ந்தும் ஓர வஞ்சனையாக பார்த்துக்கொண்டுள்ள நிலையில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

மேலதிக நேர கொடுப்பனவை வழங்கக்கோரி மேற்கொண்ட நடவடிக்கைகளை தோல்வியடைந்த நிலையிலே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தோம் என பணியாளர்கள் குறிப்பிட்டனர்.

மன்னார் மாவட்டத்தை தவிர வடக்கில் உள்ள ஏனைய மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படுகின்றது.

எனவே எமக்கு சரியான தீர்வு கிடைக்காத சந்தர்ப்பத்தில் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார பணியாளர்கள் தெரிவித்தனர்.



# ஈழத் தமிழர்களின் அரசியலில் சிவசிதம்பரத்தின் வகிபாகம்

ஆ.ந.இராசேந்திரன்

## சிவாவின் 98 ஆவது பிறந்ததினம் இன்றாகும்

*இலங்கை அரசியலில் தடம் பதித்த தலைவர்களில் மிகவும் சிறந்த அரசியல் பண்பும், உயர்ந்த மனிதத்துவ விழுமியங்களும் பொருந்திய தலைவர் சிவசிதம்பரம் ஐயா பற்றி அவரது பிறந்த தினமாகிய இன்றைய நாளில் மீட்டுப் பார்ப்போம்.*

அமரர் சிவசிதம்பரம் கரவெட்டி மணியகாரர் பரம்பரையில் தோன்றினாலும் அவரது சிந்தனை மக்கள் நலன் சார்ந்ததாக இருந்தது. அதனால் தான் அவர் தனது பல்கலைக்கழகக் காலத்தில் கம்யூனிஸ்ட் தத்துவங்களின்பால் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். இலங்கை அரசியல் வரலாற்றில் பல்கலைக்கழக நாட்களில் கம்யூனிஸ்டுகளாக விளங்கிய பலர் பிற்காலத்தில் சிறந்த அரசியல் தலைவர்களாக விளங்கியது கண்கூடு. அந்த வழியில் சிவசிதம்பரமும் சிறந்த அரசியற் தலைவராக வாழ்ந்து மறைந்துள்ளார்.

சிவசிதம்பரத்தின் அரசியல் பிரவேசம் 1956 ஆம் ஆண்டு தேர்தலில் ஆரம்பமாகியது. இத் தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் சுயேட்சையாக அவரது அரசியல் குரு கம்யுனிஸ்ட் கந்தையாவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார். அதன் பின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து வடமராச்சியில் புதிதாகப் பிரித்து உருவாக்கப்பட்ட உடுப்பிடித் தொகுதியில் 1960 ஆம் ஆண்டு மார்ச்சிலும் பின் ஜூலையிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின் 1965 ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினரானார். 1967 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தின் துணைச் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் இருந்தார்.

சிவசிதம்பரம் 1970 ஆம் ஆண்டு தேர்தலில் அவரை எதிர்த்து போட்டியிட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஜெயக்கொடியிடம் தோல்வியடைந்தார். இதேபோல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட அமிர்தலிங்கமும் அவரை எதித்து போட்டியிட்ட ஆ.தியாகராசாவிடம் தோல்வியடைந்தார். இச் சம்பவங்கள் தொடர்ந்து அரசியலில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன. இந்தத் தோல்விக்குப் பின் சிவசிதம்பரமும் அமிர்தலிங்கமும் தத்தமது கட்சிகளின் வளர்சிக்கு பெரிதும் உழைத்தார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அமைந்த அரசு தமிழர் விரோத போக்கைக் கடைப்பிடித்தது. இந்த அரசியல் போக்கிலிருந்து தமிழர்களை காக்கவேண்டுமெனில் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழர்கள் உணர்ந்தனர். இதனடிப்படையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் திருகோணாமலையில் ஒன்றுகூடி தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினர். சிவசிதம்பரம் அதன் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1976 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் உள்வாங்கி தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பரிணாமம் பெற்றது. வட்டுக்கோட்டையில் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது பற்றிய துண்டுப் பிரசுரங்களை மற்றைய தலைவர்களுடன் இணைந்து விநியோகித்தார். ஆனால் அவரை கைது செய்த அரசாங்கம் ஏனோ தெரியவில்லை அவர் மீது நடவடிக்கை எடுக்காது விடுதலை செய்து விட்டது.

1977ம் ஆண்டு தேர்தலில் தமிழரின் பலத்தை தென்னிலங்கைக்கும், வெளி உலகுக்கும் காட்ட வேண்டிய தேவை யேற்பட்ட காலகட்டத்தில் ஒன்றிணைந்த இரண்டு கட்சிகளும் ஒற்றுமையாகப் போட்டியிடுவதற்கு தீர்மானித்தன. கட்சிகளுக்கு எத்தனை இடங்கள், எந்தெந்த இடங்கள் என்ற சர்ச்சை ஏற்பட்ட போது மிகவும் இலகுவாக ஒரு கோட்பாட்டின் அடிப்டையில் தொகுதிகள் பங்கிடப்பட்டன.

1970 தேர்தலில் எந்தெந்தக் கட்சிகள் எங்கெங்கு வெற்றிபெற்றனவோ அந்தந்த தொகுதிகளை அந்தந்தந் கட்சிகளுக்கு விட்டுக் கொடுப்பது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனடிப்படையில் வட்டுக்கோட்டை, நல்லூர், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் தமிழ் காங்கிரசுக்கும் மற்றையவை தமிழரசுக் கட்சிக்கும் வழங்கப்பட்டது. இதனடிப்டையில் கிளிநொச்சி ஆனந்தசங்கரியும், நல்லூரில் சிவாவும், வட்டுக்கோட்டை குமார் பொன்னம்பலத்துக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் குமார் பொன்னம்பலம் வட்டுக்கோட்டையில் அங்கு போட்டியிட மறுத்து யாழ்ப்பாணத்தில் போட்டியிட வேண்டும் என்று அடம்பிடித்தார். இறுதியில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுவுக்கு வழங்கப்பட்டது. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் மரச் சின்னத்தில் சுயேட்சையாகக் போட்டியிட்டுத் தோற்றுப் போனார். சிவசிதம்பரம் நல்லூர் தொகுதியில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் பாராளுமன்ற உறுப்பினரானார்.

நல்லூரில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்திருந்த ஓய்வுபெற்ற நீதிபதி தம்பித்துரையின் இல்லத்தில் வசித்து அலுவலகம் அமைத்து நல்லூர் மக்களுக்குப் பணியாற்றினார். 1981 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் போது யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருந்த தமிழரசுக் கட்சியின் காரியாலயம் எரிக்கப்பட்டமையால் அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயமாக சிவசிதம்பரத்தின் அலுவலகம் செயற்பட்டது.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது கொழும்பில் இருந்த சிவசிதம்பரத்தின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. அவரது வாகனம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. அவரது குடும்பத்தினர் மதிலால் ஏறித் தப்பித்துக் கொண்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்ற போது சிவா மன்னாரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக மன்னாரில் தங்கியிருந்ததால் தப்பினார். சில நாட்களின் பின் அரசியற் தீர்வு பற்றி இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதற்காக இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் விசேட தூதுவராக இலங்கை வந்திருந்த பார்த்தசாரதியை பார்ப்பதற்காக கொழும்பு சென்றிருந்த வேளையில் அவர் தனது வீட்டைப் பார்வையிட வேண்டும் எனச் சென்றார். அவருடன் நானும் உடன் சென்றிருந்தேன். அவரின் வீடு பூரணமாக எரிந்து சாம்பலாகி இருந்தது.

சிவசிதம்பரம் 1983இன் இறுதிப் பகுதியில் அமிர்தலிங்கத்தின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்குச் சென்றார். அங்கு தமிழர் பிரச்சனை சம்பந்தமாக இந்திய அரசுடனும் மற்றைய வெளிநாட்டவர்களுடனும் தமிழர் தரப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டு அமிர்தலிங்கம், சம்பந்தன் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். சென்னை, டில்லி, கொழும்பு என்று ஓடியாடி உழைத்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி 1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னனி ஆகிய இயக்கங்களுடன் இணைந்து போட்டியிட்டது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏழு இடங்களும், ஈழமக்கள் புரட்சிகர முன்னனிக்கு மூன்று இடங்களும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு இரண்டு இடங்களும் ஈழ தேசிய ஜனநாயக முன்னனிக்கு இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டது. சிவசிதம்பரம் தலைமை வேட்பாளராக போட்டியிட்டார். அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், ஆ.ந.இராசேந்திரன், ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, இரத்தினசிங்கம் ஆகியோர் போட்டியிட்டனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து தேர்தல் வேலைகளைச் செய்யமுடியாத காரணத்தினால் எவருக்கும் தேவையான விருப்புரிமை வாக்குகளைப் பெறமுடியவில்லை.

சிவசிதம்பரம் எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளில் ஆரம்பத்திலும் கொழும்பில் நடைபெறும் கூட்டங்களில் யாருக்கும் பயப்படாது கருத்துக்களை முன்வைக்கும் தலைவராக இருந்தார். இரகசியப் பொலிசாரின் கெடுபிடிகள் உச்சமாக இருந்தகாலத்திலும் கருத்துக்களை வெளிப்படையாக கணீரென உரைத்த தலைவராக இருந்தார்.

சிவசிதம்பரம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 2001ம் ஆண்டு தேர்தலில் கிடைத்த தேசியபட்டியல் இடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். உடல் மிகவும் தளர்ந்திருந்த வேளையிலும் தமிழ் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பெருநோக்கில் சக்கர நாற்காலியில் பாராளுமன்றத்திற்கு சென்றார். 2002ம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் நாள் கொழும்பில் அவர் இயற்கையெய்தினார். இன்றைய நாளில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி அன்னாருக்கு மரியாதை செய்ய வேண்டியது எல்லாத் தமிழர்களினது கடமையாகும். ■

**“சிவசிதம்பரம் எழுபதுகளின் இறுதியிலும் எண்பதுகளில் ஆரம்பத்திலும் கொழும்பில் நடைபெறும் கூட்டங்களில் யாருக்கும் பயப்படாது கருத்துக்களை முன்வைக்கும் தலைவராக இருந்தார். இரகசியப் பொலிசாரின் கெடுபிடிகள் உச்சமாக இருந்தகாலத்திலும் கருத்துக்களை வெளிப்படையாக கணீரென உரைத்த தலைவராக இருந்தார்.**

# இந்திய பத்திரிகையாளர், அரசியல்வாதிகளின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டதா?

**உலகெங்கிலும் உள்ள சமூக உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் செல்போன் இஸ்ரேலின் பெகாசஸ் என்ற ஸ்பைவேர் மூலம் ஒட்டுக் கேட்கப்பட்டு, அவர்களின் தகவல்கள் அரசிடம் விற்கப்பட்டுள்ளது. அதில் இந்தியாவைச் சேர்ந்த 40 பத்திரிக்கையாளர்கள் உட்பட பலர் அடங்கியுள்ளனர்.**

இஸ்ரேலின் பெகாசஸ் என்ற ஸ்பைவேர் மூலம் இந்தியாவில் பத்திரிகையாளர்கள், அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் உள்ளிட்ட பலரின் தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் 'தி வயர்', பிரிட்டனின் 'தி கார்டியன்', அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' உள்பட பல சர்வதேச ஊடகங்களில் இந்தப் புலனாய்வுச் செய்தி இந்திய நேரப்படி ஞாயிறு இரவு 10 மணியளவில் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்பைவேர் என்பது ஒருவருக்குத் தெரியாமல் அவரை வேவு பார்க்கப் பயன்படுத்தப்படும் மென்பொருள் ஆகும்.

உலகெங்கிலும் உள்ள சமூக உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களின் செல்போன் இஸ்ரேலின் பெகாசஸ் என்ற ஸ்பைவேர் மூலம் ஒட்டுக் கேட்கப்பட்டு, அவர்களின் தகவல்கள் அரசிடம் விற்கப்பட்டுள்ளது. அதில் இந்தியாவைச் சேர்ந்த 40 பத்திரிக்கையாளர்கள் உட்பட பலர் அடங்கியுள்ளனர்.

இருபத்து ஓர் நாடுகளைச் சேர்ந்த 200 பத்திரிகையாளர்கள் கண்காணிப்பு செய்யப்பட்டுள்ளனர்.

பெகாசஸ் என்ற ஸ்பைவேரை உருவாக்கிய என்எஸ்ஓ எனும் இஸ்ரேலிய நிறுவனத்தால் உலகெங்கிலும் கண்காணிப்புக்கு உட்பட்டதாகக் கருதப்படும் 50,000 தொலைபேசி எண்களின் பட்டியல் சகிந்துள்ளது. இந்த பட்டியல் குறித்து பிரான்ஸைச் சேர்ந்த லாபநோக்கற்ற ஊடக நிறுவனமான ஹஃபார்பிட்டன் ஸ்டோரிஸ்ஹ புலனாய்வு செய்து செய்தியை வெளியிட்டது.

இந்த பட்டியல் எங்கிருந்து வெளியானது என்பது தெளிவாகத்



## இஸ்ரேல் தயாரித்துள்ள இரகசிய மென் பொருளை பயன்படுத்தி கண்காணிப்பு

தெரியவில்லை. ஆனால், தங்கள் நிறுவனம் எந்த தவறும் செய்யவில்லை என என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.

பெகாசஸ் ஸ்பைவேர் ஐபோன்கள் மற்றும் ஆண்ட்ராய்டு சாதனங்களைக் கண்காணித்து, அதில் இருக்கும் மேசேஜ்கள், மின்னஞ்சல்கள், தொலைப்பேசி அழைப்புகள் ஆகியவற்றை உளவு பார்த்து ஒட்டு கேட்கிறது. மேலும் தாக்குதலுக்கு உள்ளான மொபைலின் மைக்ரோபோன்களையும் இதனால் ரகசியமாக இயக்க முடியும்.

பெகாசஸ் மென்பொருள் குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு எதிரான பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், இது நல்ல மனித உரிமை பதிவுகளைக் கொண்ட நாடுகளைச் சேர்ந்த ராணுவம், சட்ட அமலாக்க மற்றும் உளவுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது என்றும் என்எஸ்ஓ கூறியுள்ளது.

இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், மூன்று எதிர்க்கட்சி தலைவர்கள், பிரதமர் நரேந்திர மோதியின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள இரண்டு அமைச்சர்கள் மற்றும் பல தொழிலதிபர்களின் செல்போன் ஒட்டுக்கேட்கப்பட்டதாக 'தி வயர்' இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்துஸ்தான் டைம்ஸ், இந்தியா டுடே, நெட்வர்க் 18, தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற செய்தி நிறுவனங்களின் பணியாற்றும் முன்னணி பத்திரிக்கையாளர்கள் கண்காணிக்கப்பட்டதாக தி வயர் கூறுகிறது.

இதுதவிர ஏஃப்பி, சிஎன்என், தி நியூயார்க் டைம்ஸ், அல் ஜசீரா உள்ளிட்ட பல சர்வதேச செய்தி நிறுவனங்களின் பணியாற்றும் செய்தியாளர்களின் செல்போனும் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளது.

''உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆதரவாளர்கள் இந்த கண்காணிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர், உலகம் முழுவதும் ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்பதை இது காட்டுகிறது" என்று ஃபார்பிட்டன் ஸ்டோரிஸின் நிறுவனர் லாரன் ரிச்சர்ட், பிபிசியின் ஷாஷாங்க் சவுகானிடம் தொலைப்பேசியில் தெரிவித்தார்.

கண்காணிப்புக்கு உள்ளானவர்கள் குறித்த கூடுதல் விவரங்கள் வரும் நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

பெகாசஸ் மூலம் 1,400 மொபைல் போன்களில் சைபர் தாக்குதல் நடத்தியதாகக் கடந்த 2019 ஆம் ஆண்டு என்எஸ்ஓ நிறுவனத்துக்கு எதிராக வாட்ஸ்ஆப் வழக்கு தொடர்ந்தது.

அந்த நேரத்தில், என்எஸ்ஓ எந்த தவறும் செய்யவில்லை என்று மறுத்தது, ஆனால் நிறுவனம் வாட்ஸ்ஆப்பை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. ■

---



# கொரோனாவின் டெல்டாவுக்கு எதிராக ஃபைசர் தடுப்பூசி

## இஸ்ரேலின் புதிய தரவுகள்

டெல்டா மாறுபாடு இஸ்ரேலில் சமீபத்திய 90% பாதிப்புகளுக்கு காரணமாக இருப்பதாகக் கூறப்படுகிறது, இஸ்ரேல் ஜூன் மாதத்தில் கட்டுப்பாடுகளை நீக்கியது. இருப்பினும் அங்கு 57% மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய சுகாதார அமைச்சகத்தின் சமீபத்திய தகவல்கள் சமீபத்திய வாரங்களில் ஃபைசர்-பயோஎன்டெக்கின் கொரோனா தடுப்பூசியின் செயல்திறன் குறைந்துவிட்டதைக் காட்டுகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் 94% செயல் திறனுடன் ஒப்பிடும்போது, தற்போது அறிகுறியுடன் கூடிய தொற்றுநோயைத் தடுப்பதில் இரண்டு டோஸ்கள் 64% மட்டுமே பயனுள்ளதாக இருக்கிறது. இதே போல் மருத்துவமனையில் சேர்ப் பதைத் தடுப்பதில்முந்தைய 97% இலிருந்து குறைந்து 93% பயனுள்ளதாக இருக்கிறது.

**டெல்டா இணைப்பு**

டெல்டா மாறுபாடு இஸ்ரேலில் சமீபத்திய 90% பாதிப்புகளுக்கு காரணமாக இருப்பதாகக் கூறப்படுகிறது, இஸ்ரேல் ஜூன் மாதத்தில் கட்டுப்பாடுகளை நீக்கியது. இருப்பினும் அங்கு 57% மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

டெல்டாவுக்கு எதிராக ஃபைசர் தடுப்பூசி 70% பயனுள்ளதாக இருப்பதாக ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கண்டறிந்ததையடுத்து இந்த புதிய தகவல்கள் வந்துள்ளன. கடந்த மாதம், தி லான்செட்டில் ஒரு ஆய்வில், தடுப்பூசியின் ஒரு டோஸ் டெல்டாவிற்கு எதிராக 32% பாதுகாப்பை மட்டுமே அளிக்கிறது, அதேநேரம் அசல் திரிபுக்கு எதிராக 79மூ பாதுகாப்பை அளிக்கிறது. இரண்டு டோஸ்களுக்குப் பிறகும், ஆன்டிபாடிகளை நடுநிலையாக்குவது, டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக அசல் திரிபுக்கு எதிரான அளவைவிட ஐந்து மடங்கு குறைவாக இருந்தது.

ஆனால் ஜூன் மாதத்தில் பப்ளிக் ஹெல்த் இங்கிலாந்தின் பகுப்பாய்வு உட்பட பிற ஆய்வுகள், ஃபைசர் தடுப்பூசி டெல்டாவுக்கு எதிராக கூட மருத்துவமனையில் அனுமதிப்பதில் இருந்து அதிக பாதுகாப்பை வழங்குகிறது என்பதை ஒப்புக்கொள்கிறது.

**ஃபைசர் ரூ டெல்டா**

இஸ்ரேலின் தரவு ஜூன் 6 முதல் ஜூலை தொடக்கத்தில் சேகரிக்கப்பட்ட "முதற்கட்ட" புள்ளிவிவரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. கொரோனாவுக்கான இஸ்ரேலின் தேசிய நிபுணர் குழுவின் தலைவரான ரான் பாலிசர், டெல்டாவுக்கு எதிரான செயல்திறனை இப்போது துல்லியமாக மதிப்பிட முடியாது என்று கூறியுள்ளார்.

ஃபைசர் செய்தித் தொடர்பாளர் டெர்விலா கீன் இஸ்ரேலில் இருந்து வரும் இந்த தரவைப் பற்றி கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார் என்று ஒரு ப்ளூம்பெர்க் அறிக்கை கூறியது. ஆனால் இதுவரையிலான சான்றுகள் ஃபைசர் தடுப்பூசி "டெல்டா வகைகளுக்கு எதிராக தொடர்ந்து பாதுகாக்கும்" என்று கூறுகிறது.

ஃபைசர் தடுப்பூசியின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு தடுப்பூசி போடப்பட்டவர்கள் குறித்து விரிவான ஆய்வை இஸ்ரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஃபைசரின் தலைமை நிர்வாக அதிகாரி ஆல்பர்ட் போர்லா, இரண்டாவது டோஸ் எடுத்துக் கொண்ட 12 மாதங்களுக்குள் மக்களுக்கு மூன்றாவது டோஸ் தேவைப்படலாம் என்று கூறியுள்ளார். ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்

- **5ஆம் 6ஆம் வினாக்களுக்கு அடுத்து வரும் சொல்லை தெரிவு செய்து கோடிடுக.**




5. காதை → கதை, பாதை → ............................
   1) பதை 2) வதை 3) சதை


6. விறகு, குருவி, வித்து, ...................
   1) விமானம் 2) விமானம் 3) தும்பி




7. 6 x 0 + 4 = ................ இக் கணித செய்கையினை செய்தால் கிடைக்கும் விடை யாது?
   1) 10 2) 4 3) 0

8. 100 தொடக்கம் 120 வரையுள்ள எண்களை எழுதும் போது ‘0’ எத்தனை தடவைகள் இடம்பெறும்?
   1) 10 2) 13 3) 2

9. கீழே தரப்பட்டுள்ள உருக்களை மடிக்கும் போது சதுர முகியாகக் கிடைக்காதது எது?


1)  2)  3) 

10.  இங்கு காட்டப்பட்டுள்ள செப்புக் கம்பியினை காட்டப்பட்ட புள்ளிக்கு ஏற்ப மடித்தால் கிடைக்கும் உரு எது?



1)  2)  3) 

11. நூறின் அரைவாசியுடன் 5ஐக் கூட்டினால் கிடைக்கும் பெறுமதி யாது?
    1) 105 2) 30 3) 55

12. ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடங்கள் என்பதை நிமிடத்தில் கூறும் போது மிகச் சரியானது எது?
    1) 130 நிமிடம் 2) 90 நிமிடம் 3) 100 நிமிடம்

13. 

இவ்வுருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை
   1) 12 2) 20 3) 16

14.  25.00  80.00  65.00

இத் தரவினை அடிப்படையாகக் கொண்டு 2 பந்துகள் ஒரு பென்சில், ஒரு புத்தகம் ஆகியவற்றின் மொத்த விலை யாது?
   1) 145.00 2) 105.00 3) 90.00

- **பின்வரும் தொடர்பைக் கொண்டு 14ஆம், 15ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

△ x □ x ○ = 40

△ x△ = 25

△ x ○ = 10

15. △ இன் பெறுமானம் யாது?
    1) 4 2) 5 3) 2

16. □ இன் பெறுமானம் யாது?
    1) 4 2) 5 3) 10

17. 6 ⊡ 8 ✳ 4 = 10 இக் கணித செய்கையில் ⊡ , ✳ ஆகிய குறியீடுகளுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகள் முறையே
    1) -, + 2) +, - 3) x , ÷

18. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றம் இல்லாது தெரியும் எழுத்து எது?
    1) Q 2) Z 3) W

19. இன்று 2ம் திகதி ஞாயிறு எனின் அடுத்து வரும் 16ம் திகதி என்ன கிழமை?
    1) திங்கள் 2) சனி 3) ஞாயிறு

20. எனது மகன் பாலன். பாலனின் பாட்டன் தேவன். எனின், எனக்குத் தேவன் என்ன முறை?
    1) தந்தை 2) மகன் 3) பேரன்

# கல்வி அமைச்சருடன் இன்று ஆசிரியர்கள் முக்கிய பேச்சு

## தீர்வு இல்லையேல் வியாழனன்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

**கொழும்பு, ஜூலை 20**

**ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.**

இந்தச் சந்திப்பில், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லையெனில், எதிர் வரும் வியாழக்கிழமை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் இணையவழி கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் நேற்று 8ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)



# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 245 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 245 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 994 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிமைத்தடுத்தலை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் உட்பிரவேசிக்கும் பகுதிகளில் 3 ஆயிரத்து 401 பேரும் அவர்கள் பயணித்த 2 ஆயிரத்து 584 வாகனங்களும் சோதனைக்கு



உட்படுத்தப்பட்டுள்ளன.

அனுமதியின்றி மாகாணத்தை விட்டு வெளியேற மற்றும் உட்பிரவேசிக்க முற்பட்ட 293 பேர் அவர்கள் பயணித்த 139 வாகனங்களிலேயே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளதால் அது தொடர்பில் கருத்தில்கொண்டு செயற்படுமாறு பொலிஸ் பேச்சாளர், பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (இ)

# முன்னரை விடவும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படும் நாடு

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 20

‘டெல்டா’ வகை நாட்டில் முதன்மை கொரோனா வைரஸ் தொற்றாக உருவெடுக்கின்றது. இதனால நாடு முன்னர் எதிர் கொண்டதை விடவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படும்.

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“நாட்டின் பல பகுதிகளிலும் ‘டெல்டா’ கொரோனா மாறுபாடு பதிவாகி வரும் நிலையில், பயணக்கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது பொருத்தமற்றது.

தற்போதைய நிலையில், தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ள பல நாடுகளும் ‘டெல்டா’ வைரஸ் பரவலைத் தடுக்க பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

நாட்டின் தற்போதைய நிலை புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலை அல்ல. மிகவும் ஆபத்தான நிலைமையை நாடு எதிர்கொண்டுள்ளது.

அரசும் கொள்கை வகுப்பாளர்களும் பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதையும், பொதுமக்கள் அனைத்தையும் மறந்து வருவதையும் காண்கின்றோம்.

இந்தச் சூழ்நிலையை அரசும் மக்களும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஒரு பேரழிவு சூழ்நிலையைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் அது நாட்டில் மிகவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைக்கு வழிவகுக்கும்” - என்றார். (இ)



# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவு

கொழும்பு, ஜூலை 20

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானித்துள்ளது என அதன் தலைவர் மனோகணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இதன்படி தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்களான மனோ கணேசன், வே.இராதாகிருஷ்ணன், ப.திகாம்பரம், எம்.வேலுகுமார், எம்.உதயகுமார் ஆகியோர் இன்று எதிர்த்து வாக்களிக்கவுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்று விவாதம் ஆரம்பமானது. இன்று மாலை வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது. (இ)

# பொலிஸ் நாய்களுடன் விசேட சுற்றிவளைப்பு: குற்றங்களுடன் தொடர்புடைய 3,909 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20

“நாடளாவிய ரீதியில் சுமார் 14 ஆயிரம் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் வெவ்வேறு குற்றங்களுடன்தொடர்புடைய 3 ஆயிரத்து 909 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.”

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -




“இந்த விசேட சுற்றிவளைப்பில் மதுபானம் அருந்திய நிலையில் 580 பேரும், போதைப்பொருட்களுடன் 1,250 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 645 பேரும், குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த 98 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருந்த ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புக்கு உதவியாக 55 பொலிஸ் நாய்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன” - என்றார். (இ)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்

பொகவந்தலாவை, ஜூலை 20

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகல பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 45, 46 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களைக் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ)

# துறைமுகத்துக்குள் நுழைய முற்பட்ட சீனப் பிரஜை உள்ளிட்ட 5 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 20

கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதியின்றி நுழைய முற்பட்ட சீனப் பிரஜை உள்ளிட்ட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

துறைமுக நகரத்துக்கும் கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையில் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு மனிதவளத்தை வழங்கும் நிறுவனத்தின் உரிமையாளரான சீனப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துறைமுகத்துக்குள் பிரவேசிக்கும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரம் இன்றி, குறித்த நபர்களை துறைமுகத்துக்குள் அழைத்துச் செல்ல முயற்சித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள், கரையோரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ)



# பெரும் சர்ச்சைகளைக் கிளப்பிய டென்மார்க் கார்ட்டூனிஸ்ட் மறைவு

கோப்பென்ஹேகன், ஜூலை 20,

முகமது நபியின் கேலிச் சித்திரங்களை வரைந்து உலகெங்கும் பதற்றத்தையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்திவந்த டென்மார்க் நாட்டின் கேலிச் சித்திர ஓவியர் கர்ட் வெஸ்டர் கார்ட் (Kurt Westergaard) தனது 86 ஆவது வயதில் காலமானார்.

டெனிஷ் நாட்டின் “யூலன்ட் போர்ஸ்டன்” (Jyllands-Posten) நாளிதழில் 2005 ஆம் ஆண்டில் ”முகமது நபியின் முகங்கள்” என்ற பெயரில் அவர் வரைந்த 12 கேலிச் சித்திரங்கள் முஸ்லிம் நாடுகள் பலவற்றில் பெரும் வன்முறை ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுத்தன.

முகமது நபியை வெடிகுண்டு வடிவிலான தலைப்பாகையுடன் சித்தரிக்கின்ற அந்தக் கேலிச் சித்திரங்கள் ஆரம்பத்தில் பெரிதும் கவனத்தை ஈர்த்திராத போதிலும் டென்மார்க் தலைநகரில் அதற்கு எதிராகப் பல நாட்கள் நடந்த ஆர்ப்பாட்டங்களும் முஸ்லிம் நாடுகள் சிலவற்றின் டென்மார்க் தூதர்களிடம் இருந்து வெளிப்பட்ட எதிர்ப்பும் அவற்றை உலக அளவில் பிரபல்யப்படுத்தின. 2006 பெப்ரவரியில் முஸ்லிம் உலகெங்கும் டென்மார்க் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடிப்பதற்குக் காரணமாகின.அந்த நாட்டின் தூதரகங்கள் தாக்கப்பட்டன. பத்திரிகைகளின் சுயதணிக்கை, மத நிந்தனை தொடர்பான விவாதங்களையும் உருவாக்கின.

டென்மார்க் அரசியலில் சூடு கிளப்பிய அந்த விவகாரம் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அந்நாடு பெரும் வெளியுறவு நெருக்கடியைச் சந்திப்பதற்கும் வழிவகுத்தது. “யூலன்ட் போர்ஸ்டன்” நாளிதழில் வெளியாகிய அதே கேலிச் சித்திரங்களை பிரான்ஸின் பிரபல கேலிச் சித்திர வார இதழான “சார்ளி ஹெப்டோ” 2012 இல் தனது பதிப்பில் மறுபிரசுரம் செய்திருந்தது. முகமது நபி தொடர்பான சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரங்களுடன் தொடர்புபட்ட வன்செயல்களின் உச்சமாக “சார்ளி ஹெப்டோ” வார இதழ் அலுவலகத்தின் மீது ஆயுதபணிகள் பெரும் தாக்குதல் நடத்தி அதன் ஆசிரியபீடப் பணியாளர்களைக் கூண்டோடு கொல்வதற்கு அவை போன்ற சித்திரங்களே காரணமாகின.

கர்ட் வெஸ்டர்கார்ட் 1980 களின் நடுப்பகுதியில் “யூலன்ட் போர்ஸ்டன்” பத்திரிகையின் கேலிச் சித்திர ஊடக வியலாளராகப் பணிபுரிந்தவர். பின்னாளில் நபி தொடர்பான சர்சைகளால் பிரபலமாகிய அவரது உயிருக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளால் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. அதனால் தனது வாழ்நாளின் பிற்பகுதியை அவர் பொலீஸ் காவலுடன் முகவரி தெரியாத ரகசிய மறைவிடங்களில் கழிக்க நேர்ந்தது.

தனது கேலிச் சித்திரங்களுக்காக வெஸ்டர்கார்ட் ஒரு போதும் மன்னிப்புக் கேட்க முன்வரவில்லை. மதசார்பின்மையைப் பேணுகின்ற மேற்கு நாடுகளில் இஸ்லாமிய சமயத்தின் மீதான ஆரோக்கியமான ஆய்வுகளுக்கும் உரையாடல்களுக்கும் தனது சித்திரங்கள் “முக்கியமானவை” என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

# பிரிட்டனில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வு

லண்டன், ஜூலை 20,

பிரிட்டனில் நேற்று திங்கள் கிழமை முதல் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இங்கிலாந்து கடந்த சில நாட்களாக கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துவரும் நிலையில், நேற்று முதல் ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மருத்துவ நிபுணர்கள் தரப்பில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இருப்பினும் தடுப்பூசிகள் வந்த பிறகு கொரோனா பாதிப்பின் தீவிரம் குறைந்துள்ளதாக இங்கிலாந்து அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இரவு நேர கிளப்கள், உள் அரங்கு கூட்டங்கள் ஆகியவை எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாஸ்க் அணிதல் மற்றும் வீட்டில் இருந்தபடியே பணியாற்றுவதற்கான சட்ட ரீதியான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன

பொதுமக்கள் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பிரதமர் போரிஸ் ஜான்சன், தடுப்பூசி போட்டுக் கொள்வதிலும் சுணக்கம் காட்டக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு 4 பேர் பலி! 19 பேர் படுகாயம்!!



வாஷிங்டன், ஜூலை 20,

அமெரிக்காவில் நடந்த தொடர் துப்பாக்கி சூடு சம்பவங்களில் 4 பேர் பலியாகி னர். 19 பேர் படுகாயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரேநாளில் இடம்பெற்ற இந்தத் தொடர் தாக்குதலால் மக்கள் பீதியடைந்துள்ளார்கள்.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக துப்பாக்கி கலாசாரம் பெருகி வருகிறது. பொலிஸாரை குறிவைத்தும், பொதுமக்கள் அதிகம் கூடும் பாடசாலைகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களிலும் தொடர் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் தலைநகர் வாஷிங்டன் உள்பட 3 மாகாணங்களில் அடுத்தடுத்து அரங்கேறிய தொடர் துப்பாக்கி சூடு சம்பவங்கள் அந்த நாட்டை அதிர வைத்தன.

தலைநகர் வாஷிங்டனில் உள்ள ஒரு விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு இரு தேசிய அணிகளுக்கு இடையிலான போட்டி நடந்தது. இதைக் காண ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு திரண்டிருந்தனர்.

போட்டி நடந்து கொண்டிருந்தபோது ரசிகர்கள் கூட்டத்தில் இருந்த ஒரு நபர் திடீரென துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போட்டி உடனடியாக நிறுத்தப்பட்டது. ரசிகர்கள் அனைவரும் தங்களின் உயிரை காப்பாற்றிக்கொள்ள அலறியடித்துக்கொண்டு மைதானத்தை விட்டு வெளியே ஓடினர்.

ஆனாலும் அந்த மர்மநபர் தொடர்ந்து தன் கண்ணில் பட்டவர்களை யெல்லாம் குருவியை சுடுவது போல சுட்டு தள்ளினார். இந்த துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த துப்பாக்கிச் சூடுக்கான பின்னணி என்ன என்பது உடனடியாக தெரியவராத நிலையில் துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பியோடிய நபரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

முன்னதாக ஒரேகான் மாகாணம் போர்ட்லேண்ட் நகரில் நேற்று முன்தினம் காலை சில மணி நேர இடைவெளியில் அடுத்தடுத்து 4 துப்பாக்கி சூடு சம்பவங்கள் அரங்கேறின. இதில் ஒரு பெண் உட்பட 2 பேர் பலியாகினர். மேலும் 7 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சேக்ரமெண்டோ நகரில் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட மோதல் துப்பாக்கி சூட்டுக்கு வழிவகுத்தது. இரு தரப்பையும் சேர்ந்தவர்கள் ஒருவரையொருவர் துப்பாக்கியால் சுட்டு கொண்டனர்.

இதில் 6 பேரின் உடல்களை துப்பாக்கி குண்டுகள் துளைத்து ரத்த வெள்ளத்தில் சரிந்தனர். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆஸ்பத்திரி செல்லும் வழியிலேயே 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த மற்ற 4 பேருக்கும் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# தலிபான் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவம் உதவி



காபூல், ஜூலை 20,

எல்லை தாண்டி நாட்டுக்குள் வந்து தலிபான் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் உதவுவதாக, ஆப்கானிஸ்தான் உளவுத்துறை குற்றம் சாட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான போரில் அந்த நாட்டு ராணுவத்துக்கு பக்கபலமாக இருந்து வந்த அமெரிக்க படைகள் அங்கிருந்து வெளியேறிவிட்டன. இதனால் ஆப்கானிஸ்தானில் தலீபான்களின் கை மீண்டும் ஓங்கியுள்ளது. கடந்த சில வாரங்களாக ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான பகுதிகளை அவர்கள் கைப்பற்றி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தான் அரசுக்கு எதிரான இந்த தாக்குதலில் தலீபான் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி வருவதாக ஆப்கானிஸ்தானின் முதல் துணை அதிபர் அம்ருல்லா சலே குற்றம் சாட்டினார். ஆனால் இந்தக் குற்றச்சாட்டை பாகிஸ்தான் திட்டவட்டமாக மறுத்தது.

இந்த நிலையில் பாகிஸ்தானை சேர்ந்த ராணுவ வீரர்கள் மற்றும் லஷ்கர் - ஈ - தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் எல்லை தாண்டி ஆப்கானிஸ்தானுக்குள் வந்து தலிபான் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்து வருவதாக பாகிஸ்தான் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் உளவுத்துறை வட்டாரங்கள் கூறும்போது, பாகிஸ்தான் 300க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தான் அனுப்பி வைத்துள்ளது. அவர்களில் ஓய்வுபெற்ற மூத்த ராணுவ அதிகாரிகள் டஜன் கணக்கானோரும் அடங்குவர். மேலும் பாகிஸ்தானின் மோசமான உளவு அமைப்பான ஐஎஸ்ஐ அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் ஆப்கானிஸ்தான் வந்துள்ளனர்.

இதுதவிர லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் சுமார் 7 ஆயிரம் பேரை பாகிஸ்தான் அனுப்பியிருக்கிறது. இவர்கள் தலீபான் பயங்கரவாதிகளுக்கு வழிகாட்டுகிறார்கள். ஆப்கானிஸ்தான் அரசு படைகளுக்கு எதிராக அவர்களுடன் (தலிபான்களுடன்) இணைந்து சண்டையிடுகிறார்கள் என்று ஆப்கானிஸ்தான் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

# ஒரு நாள் தொடரை வென்ற பங்களாதேஷ்



சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி கைப்பற்றியுள்ளது.

ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 240 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மாதேவரே 56 ஓட்டங்களையும் பிரெண்டன் ரெய்லர் 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், சொரிபுல் இஸ்லாம் 4 விக்கெட்டுகளை யும் சகிப் ஹல் ஹசன் 2 விக் கெட்டுகளையும் டஸ்கின் அஹ மட், சய்பூதின் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 241 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களா தேஷ் அணி, 49.1 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பங்களா தேஷ் அணி 3 விக்கெட்டுக ளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்க ளாக, ஆட்டமிழக்காது சகிப் ஹல் ஹசன் 96 ஓட்டங்களையும் மொஹமட் சய்பூதின் ஆட்ட மிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிம்பாப்வே அணியின் பந்துவீச்சில், லூக் ஜோங்வே 2 விக்கெட்டுகளையும் பிளெஸிங் முஸரபானி, ரிச்சர்ட் ன்கரவா, மாதேவரே மற்றும் சிகாண்டர் ரஸா ஆகியோர் தலா 1 விக்கெட்டை யும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 109 பந்துகளில் 8 சிக்ஸர்கள் அடங்களாக ஆட்ட மிழக்காது 96 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட சகிப் ஹல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டார்.



முதல் ஒருநாள் போட்டி:

# இந்திய அணியிடம் வீழ்ந்தது இலங்கை!

கொழும்பு,ஜூலை,20

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் இந்தியா அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முத லில் துடுப்பெடுத்தாட தீர்மா னித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 262 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, சமிக்க கருணாரத்ன ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் தசுன் சானக 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணி யின் பந்துவீச்சில், தீபக் சஹார், யுஸ்வேந்திர சஹால் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஹர்திக் பாண்டியா மற்றும் குர்ணல் பாண்டியா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தி னர்.

இதனைத் தொடர்ந்து 263 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந் தியா அணி, 36.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஷிகர் தவான் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களையும் இசான் கிசான் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணி யின் பந்துவீச்சில், தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளையும் லக்ஷான் சந்தகென் 1 விக்கெட் டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 24 பந்துகளில் 9 பவுண்ரிகள் அடங்களாக 43 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட பிரித்வீ ஷோ தெரிவு செய்யப்பட்டார்.

(அ)

# ரோக்கியோ ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டி நடுவராக இலங்கைப் பெண்!

2020 ஒலிம்பிக் போட்டிகளில் குத்துச்சண்டை போட்டிகளில் நடுவராக இலங்கையை சேர்ந்த பெண்ணொருவர் தகுதி பெற்றுள்ளார்.

இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள பெண் தலைமை அலுவலர் நெல்கா ஷிரோமலா 2020 ரோக்கியோ ஒலிம்பிக்கில் குத்துச்சண்டை போட்டி நடுவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

காலி ரிப்பன் பெண்கள் கல்லூரி மாணவியான இவர், 1997 ஆம் ஆண்டில் பொலிஸ் சேவையில் இணைந்தார்.

2001 ஆம் ஆண்டில், பொலிஸ் விளையாட்டுக் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய போட்டியில் பங்கேற்ற முதல் பெண் பொலிஸ் குத்துச் சண்டை வீரர் என்ற பெருமையை பெற்றார்.

2009 ஆம் ஆண்டில் முதல் இலங்கை பெண் குத்துச்சண்டை நடுவர் ஆனார். 2011 ஆம் ஆண்டில் முதல் வகுப்பு சர்வதேச குத்துச்சண்டை



நடுவராக உயர்வு பெற்றார். மேலும் 2011 ல் சர்வதேச போட்டியில் இலங்கையை பிரதிநிதித் துவப்படுத்திய முதல் பெண் குத்துச்சண்டை நடுவர் என்ற பெருமையை பெற்றார்.

# ஒலிம்பிக் கிராமத்தில் புகுந்தது கொரோனா!

## 3 தடகள வீரர்கள் தொற்றால் பாதிப்பு

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் உள்ள ஒலிம்பிக் கிராமத்தில் தங்கியிருந்த 3 வீரர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒலிம்பிக் நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் டோக்கியோ நகரில் வரும் 23ஆம் திகதி கோலாகலமாகத் தொடங்க இருக்கும் நிலையில் வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அதிக பாதுகாப்பு அம்சங்கள், தீவிர பரிசோதனைக்குப் பின் அனுமதிக்கப்படக்கூடிய ஒலிம்பிக் கிராமத்துக்குள் தங்கி இருந்த வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது ஏற்பாட்டுக் குழுவை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இந்த 3 வீரர்களும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்த அடையாளத்தை நிர்வாகக் குழுவினர் வெளியிடவில்லை.

இதுவரை ஒலிம்பிக் போட்டிக்கு வந்தவர்களில் 10 பேருக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 5 பேர் வீரர்களுடன் வந்தவர்கள், ஒருவர் ஒப்பந்தகாரர், ஒருவர் பத்திரிகையாளர் என 10 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது என்று போட்டி நிர்வாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் ஒலிம்பிக் போட்டியைக் காண வந்தவர்களில் 55 பேர் இதுவரை தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் போட்டி நிர்வாக இயக்குநர் கிறிஸ்டோப் தூபி வெளியிட்ட அறிக்கையில் "கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் அடையாளம் காணப்படுவார்கள். இது வெறும் புள்ளிவிவரங்களோடு முடிந்துவிடாமல், தொடர்ந்து கண்காணிப்பிலும் ஈடுபடுவோம். தொடர்ந்து பரிசோதனைகளும் நடத்தப்படும்.

இதுவரை ஜப்பானுக்குள் வருவதற்கு முன் 18 ஆயிரம் வீரர், வீராங்கனைகளுக்கு 40 ஆயிரம் கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. விமான நிலையத்தில் பரிசோதனைகள் நடத்தப்படுதோடு நாள்தோறும் கொரோனா பரிசோதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஜூலை முதலாம் திகதியிலிருந்து 18 ஆயிரம் வீரர்கள்



வெளிநாடுகளில் இருந்து ஜப்பான் வந்துள்ளனர். வெளிநாடுகளில் இருந்து வரும் வீரர்கள் குறைந்தபட்சம் 2 முறை கொரோனா பரிசோதனை செய்து நெகட்டிவ் சான்று பெற்ற பின்பே அனுமதிக்கப்பட்டார்கள். டோக்கியோ வந்தபின் புதிதாக கொரோனா பரிசோதனையும் வீரர்களுக்கு எடுக்கப்பட்டது, ஒலிம்பிக் கிராமத்துக்குள் நுழையும் முன்பும் கடுமையான பரிசோதனைகளும், தனிமைப்படுத்துதலும் செய்யப்பட்டன" எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவில்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 5 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை 20

**யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 5 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லாததால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்பையில் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவர்களது வீடுகளில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுள் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரும் அடங்குகின்றார்.

இதேவேளை, இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய் மற்றும் பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என நால்வர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஏப்ரல் மாத முற்பகுதியில் இந்தியாவில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், மூன்று மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

ஐவருக்கும் எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவின் கீழ் "பி" அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லாததால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனால் சந்தேகநபர்கள் ஐவரையும் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ- 3)

# கதிர்காமம் திருவிழாவில் கலந்துகொண்ட நடனக்குழுவில் 15 பேருக்குக் கொரோனா

கதிர்காமம், ஜூலை 20

கதிர்காமம் முருகன் கோயிலின் வருடாந்தத் திருவிழாவில் பங்கேற்ற நடனக் குழுவினரில் 15 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்று தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

காலி பிரசேத்திலுள்ள குருகெதர ஓய்வு மண்டபத்தில் தங்கியிருந்த நடனக் குழுவில் 11 பேருக்கும், மாத்தறை பிரதேசத்தில் தங்கியுள்ள நால்வருக்குமே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நடனக்குழுக்களின் அங்கத்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையிலேயே 15 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நடனக் கலைஞர்களைத் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(இ)

# பூஸா சிறையில் மேலும் 51 கைதிகளுக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 20

பூஸா சிறைச்சாலையில் மேலும் 51 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 56 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 51 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 34 கைதிகளை அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 17 பேரை பூஸா சிறைச்சாலையிலே தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்ட 51 தொற்றாளர்களுடன் பூஸா சிறைச்சாலையில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 768 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் காலி மாவட்ட சுகாதார சேவைகள் காரியாலயம் தெரிவித்துள்ளது. (இ)

# அரசை வீட்டுக்கு அனுப்புவதற்காக வீதியில் இறங்கியுள்ளனர் மக்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

"எதிர்க்கட்சிக்கு வாக்களித்த மக்கள் மட்டுமன்றி இந்த அரசை அமைப்பதற்காகப் பாடுபட்ட அனைத்து மக்களும் இன்று வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அரசு வீட்டுக்குப் போக வேண்டும் என்பதில் மக்கள் அனைவரும் உறுதியாக உள்ளனர்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார்.

"ஆசிரியர் துறைக்கு ஏன் வந்தோம் என்று நினைக்குமளவுக்கு ஆசிரியர்கள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வரலாற்றில் ஒரு நாளேனும் வீதிக்கு இறங்காத - இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக முன்னின்று உழைத்த ஆசிரியர்கள், வீதிக்கு இறங்கும் வகையில் இந்த அரசு நடந்துகொண்டுள்ளது.

ஆசிரியர்களைப் பிரச்சினைக்கு உள்ளாக்கிய இந்த அரசு, அவர்களது சம்பளம் மற்றும் அவர்களது பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு செயற்படாததுடன் முழு கல்வித்துறையும் பாதிப்படையச் செய்துள்ளது.

இன்று ஆசிரியர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆசிரியர் துறைக்கு வந்து வாழ்வை வீணடித்துவிட்டோமா என்று நினைக்குமளவுக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவர்களைத் தங்களது பிள்ளைகளாக நினைத்து சேவையாற்றக்கூடியவர்கள். தற்போதைய நிலையில் தங்களது மாணவர்களின் கல்வி நிலை குறித்து ஆசிரியர்களும் கவலையில் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் ஆசிரியர்கள் குறித்து அவதூறாகப் பேசியவர்கள் தொடர்பிலும் நினைவூட்ட வேண்டியுள்ளது.

ஆசிரியர்களை அவதூறாகப் பேசியவர், ஆசிரியர் ஒருவரிடம் கல்வி கற்றுவந்தவரா என்று கேள்வி கேட்கத் தோன்றுகின்றது" - என்றார். (இ)

# பஸிலுக்கு எதிரான வழக்கை தொடர்ந்து நடத்துமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2016ஆம் ஆண்டில் மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஜீ.ஐ குழாய் வழக்கைத் தொடர்ந்தும் நடத்துவது தொடர்பில் ஆராயுமாறு அவரது சட்டத்தரணிகள், சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு சட்டமா அதிபர் தயாராகவுள்ளார் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்லா நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

2015 ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் உள்ளூராட்சி சபைகளினால் கோரிக்கை விடுக்கப்படாத போதிலும், திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான 365 இலட்சம் ரூபா செலவில் ஜீ.ஐ. குழாய்களை கொள்வனவு செய்து அவற்றை உள்ளூராட்சி சபைகளுக்குப் பகிர்ந்தளித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அமில கித்சிறி ரணவக்கவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

# பொய்யான வாக்குறுதியை வழங்கி எங்களை ஏமாற்ற முற்பட வேண்டாம்

## கோரிக்கை நிறைவேறும் வரை போராடுவோம் என்று உலப்பன சுமங்கல தேரர் நேற்று சூளுரை



கொழும்பு, ஜூலை 20

"எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை ஆர்ப்பாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். பொய்யான வாக்குறுதிகளை எமக்கு வழங்கி எம்மை ஏமாற்ற முற்பட வேண்டாம் என்று அரசைக் கோருகின்றோம்."

- இவ்வாறு உலப்பன சுமங்கல தேரர் தெரிவித்தார்.

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து, பத்தரமுல்ல, இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே உலப்பன சுமங்கல தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"24 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எந்தவோர் அரசும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் நடத்திய பேச்சின்போது எமது சாதாரண கோரிக்கைகளை முன்வைத்தோம். எனினும், அவர்கள் எமது கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை. அவர்களால் செய்யக்கூடிய விடயங்களையே முன்வைத்தனர். அரசு கூறிய விடயங்களுக்குத் தலைசாய்க்க நாம் வரவில்லை.

எமக்கான சம்பளத்தை முறையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் வந்தோம். அந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் வரை கல்வி அமைச்சு வழங்கும் விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக இல்லை.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நாம் எமது தொழிற்சங்கப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

அரசியல் நோக்கத்துக்காகச் செயற்படும் குழுவினர் நாம் அல்ல. எனவே, பொய்யான வாக்குறுதிகளை எமக்கு வழங்கி எம்மை ஏமாற்ற முற்பட வேண்டாம் என்று அரசைக் கோருகின்றோம்" - என்றார். (இ)

## ஆண்கள்...

ஆண்கள் 28 பேர் மற்றும் பெண்கள் 20 பேர் என மேலும் 48 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3,827 ஆக அதிகரித்துள்ளது.

## வவுனியாவில...

கும் இடங்களை இனங்கண்டு அழிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சுகாதார பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் தமது இருப்பிடங்கள் சுத்தம் செய்து துப்பரவாக்கி வைப்பதுடன் டெங்கு நுளம்பு குழம்பிகள் பெருக்கத்தை கட்டுப்படுத்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு சுகாதார பிரிவினரால் வீடுகளுக்கு சென்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## கொழும்பு...

வடக்கிலும் டெல்டா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த வைரஸ் பரவி இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, காலி, மாத்தறை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையால், ஏனைய பகுதிகளில் இந்த வைரஸ் பரவல் இல்லையென உறுதியாக கூற முடியாது எனவும் அவர் கூறினார். (அ)

## 300 டெல்டா..

மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை உள்ளிட்ட மாவட் டங்களில் இந்த தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 2/3 பெரும்பான்...

தில் 11 நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன.

முதலாவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப் பட்டது. அது என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது?

இதுபோன்று கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது.

நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் குறித்து அச்சப்படாத காரணத்தினால்தான், இன்று விவாதத்துக்கு இதனை எடுத்துள்ளோம்.

இன்று இதனைக் கொண்டுவந்துள்ள எதிர்த்தரப்பினர் தேவலோகத்தில் இருந்து இறங்கி வந்தவர்கள் போன்றுதான் செயற்படுகிறார்கள்.

எரிபொருள் வாங்க, மக்களை நீண்ட வரிசையில் கடந்த காலத்தில் நிற்க வைத்த இந்தத் தரப்பினர் தான் இன்று எரிபொருள் விலையேற்றம் குறித்து பேசுகிறார்கள்.

இந்த நிலையில் எரிசக்தி அமைச்சருக்கு எதிராக இவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் வெற்றிகரமாகத் தோற்கடிப்போம்-என்றார்.

## 1,487 பேருக்கு...

உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 20 ஆயிரத்து 744 பேர் சிகிச்சை பெறுகின்றனர். (இ)

# ஜனாதிபதி, பிரதமருடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு

கொழும்பு, ஜூலை 20,

20வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டுள்ளனர் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவுடன் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட் அந்த சந்திப்பில் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த சந்திப்பு குறித்து கருத்துவெளியிட்டுள்ள நீதியமைச்சர், உதய கம்மன்பில மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக வாக்களிப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் முஸ்லீம் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் ஈடுபட்டனர் எனவும் ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் 55 பேர் உட்பட வடக்கில் 68 பேருக்கு தொற்றுறுதி!

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.மாவட்டத்தில் 55 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 68 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் நேற்று 436 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில்யாழ். மாவட்டத்தில் 55 பேருக்குத் தொற்று, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேர், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 08 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 03 பேர், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், வவுனியா வடக்கில் 10 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் ஆகியோருக்கு தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

அதேவேளை, அக்கராயன்குளம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் 02 பேருக்கும் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. (அ)

## நம்பிக்கையில்லா பிரேரணையை தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிக்கும்!

கொழும்பு, ஜூலை 20

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இன்று நம்பிக்கையில்லா தீர் மானம் மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 9.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரை 1150 ரூபாவுக்கு விற்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 20

புதிதாக அறிமுகப்படுத் தப்பட்டு சந்தையில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் 18 லீற்றர் - 9.5கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் 1150 ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய உள்நாட்டு லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை குறைக்க இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.ஜனாதிபதி தலைமையில் நேற்று கூடிய அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.




## விடுதலை...

செயல்படுகின்றனர்.

அவ்வாறானவர்களைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அடையாளம் கண்டு கைதுசெய்து வருகின்றனர்.விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் முயற்சிகளுக்குத் துணைபோகின்றவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

நாட்டில் இன்னொரு இரத்த ஆறு வேண்டாம். வடக்கு, கிழக்கு இளைஞர்களே பொறுப்புணர்வுடன் செயற்படுங்கள். உங்கள் இளமைக்காலம் பொன்னானது. அதைச் சுதந்திரமாகக் கழியுங்கள். அதைவிடுத்து பயங்கரவாதச் செயல்களுக்குத் துணைபோய் சிறைகளில் உங்கள் இளமைக்காலத்தைக் கழிக்க வேண்டாம்" - என்றார். (இ)

# 'ரன் மல்லி' விசாரணை சி.ஐ.டியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 20

டுபாயில் வசிக்கும் போதைப்பொருள் கடத்தற்காரரான 'ரன் மல்லி' என அழைக்கப்படுபவர் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அவருடைய சொத்துக்கள் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையில் அவருடைய சொத்துக்களைத் தம்வசம் வைத்திருக்கும் உறவினர்கள் மற்றும் நெருங்கியவர்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனிடையே, 'ரன் மல்லி' என அழைக் கப்படும் சந்தேகபரின் உறவினர் ஒருவரது வீட்டில் நிலத்தில் புதைக் கப்பட்டிருந்த நிலையில் ஒரு கோடி 39 இலட்சம் ரூபா பணம் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது. (இ)

## நாட்டை..

நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தாலும், பாதிப்பு இன்னும் குறைவடையவில்லை.

தடுப்பூசி செலுத்தப்பட்ட பல நாடுகளில் டெல்டா கொரோனா வைரஸ் திரிபினால் பாதிப்பேற்பட் டுள்ளது.

தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக உயிரிழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும்.

எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துவதை போல் அன்றி, கிரமமான முறையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம் பெறுகின்றன-என்றார். (அ)

# தேசப்பற்றாளர்கள் யார் என்பது வாக்கெடுப்பில் தெரியவரும்

கொழும்பு, ஜூலை 20

அமைச்சர் உதய கம்மன் பிலவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது தேசப் பற்றுள்ளவர்கள் யார் துரோகிகள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்வார்கள் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சஜித் பிரேமதாச இதனை தெரிவித்துள்ளார். பலத்தை பயன்படுத்தி இந்த நாட்டை அனாதையாக் கியுள்ள அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்புவதற்காக நாங்கள் இந்த பயணத்தை முன்னெடுத்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் முதல் சோதனையாக நாங்கள் யார் தேசப்பற்றுள்ளவர் யார் துரோகி என்பதை கண்டுபிடிக்க முயல்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# மகேந்திரனை அழைத்து வருவது தொடர்பில் தொடர்ந்து பேச்சுகள்

## நீதிபதிகள் குழாமுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு



**கொழும்பு, ஜுலை 20**

**மத்திய வங்கியின் முதலாவது பிணைமுறிகள் மோசடி தொடர்பில் தொடரப்பட்டுள்ள வழக்கின் முதலாவது பிரதிவாதியான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்தல் சட்டத்தின் கீழ் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் இரு நாட்டு சட்டமா அதிபர்களுக்கும் இடையில் தொடர்ந்தும் தகவல்கள் பரிமாறப்பட்டு வருகின்றன என்று ச ட்டமா அதிபர் நேற்று மேல் மாகாண நிரந்தர மூவரடங்கிய நீதிபதிகள் குழாமுக்கு அறிவித்துள்ளார்.**

குறித்த பேச்சுவார்த்தை வெற்றியளிக்காவிடின் அர்ஜுன மகேந்திரனின்றி வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு சட்டமா அதிபர் எதிர்பார்த்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவான தெரிவித்தார்.

இரு நாடுகளினதும் சட்டமா அதிபர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றியளிக்காவிட்டால் சட்டமா அதிபரால் எடுக்கப்படும் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் நீதியரசர் குழாத்தின் தலைவராக செயற்படும் சம்பா ஜானகி ராஜரத்ன வினவியமைக்கே இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பத்தாவது பிரதிவாதியான சிங்கப்பூரில் வசிக்கும் பேர்ப்பச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான அஜான் புஞ்சிஹேவா, தற்சமயம் மலேசியாவுக்குச் சென்றுள்ளதால் அவரின்றி வழக்கை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரியந்த நாவான நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

2015 பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறிகள் ஏலத்தில், அரசுக்குச் சொந்தமான 68 கோடி 80 இலட்சத்துக்கும் அதிக நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி நம்பிக்கையைச் சீர்குலைத்த குற்றச்சாட்டில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் பத்தினிகே சமரசிறி உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சம்பா ஜானதி ராஜரத்ன மற்றும் நாமல் பலல்லே உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் எடுக்கவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகளை அறிக்கையிடுவதற்காக வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்திவைத்து நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது. (இ)

## கொத்தலாவல கட்டடத்திலிருந்து வீழ்ந்து யுவதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 20

இரத்மலானை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகக் கட்டடத் தொகுதியின் 06 ஆம் மாடியிலிருந்து வீழ்ந்து சந்தேகத்துக்கிடமான முறையில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட முகாமைத்துவ உதவியாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த யுவதி, பாணந்துறைப் பகுதியைச் சேர்ந்த 31 வயதானவர் என்பது தெரியவந்துள்ளது. இந்த மரணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகி யுள்ளன என்று கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## தெற்காசியாவிலேயே விரைவாக தடுப்பூசி ஏற்றும் நாடு இலங்கை!

கொழும்பு, ஜுலை 20

தெற்காசியாவிலேயே விரைவாக தடுப்பூசி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நாடு இலங்கை என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபடுகின்றவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை பார்வையிட்டபோதே அமைச்சர் நாமல் இவ்வாறு குறிப்பிட்டார். சுற்றுலாத்துறை உள்ளிட்ட பொருளாதார மையங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்



உதிர்வு
02
-
05
-
1953

உதிர்வு
17
-
07
-
2021

## நடனசிகாமணி பரராஜசிங்கம்

யாழ். கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய வீதியைப் பிறப்பிடமாகவும், கனடா Oshawa வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நடனசிகாமணி பரராஜசிங்கம் அவர்கள் 17-07-2021 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற பரராஜசிங்கம் – அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கீதபூசனம் தாமோதரம்பிள்ளை – இராசலிங்கம், லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும்,வாசுகி அவர்களின் அன்புக் கணவரும்,செந்தூரி, செந்தூரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,றிக்காடோ, பிந்தி, சோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஸ்ரபன், இஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**பார்வைக்கு**
Tuesday, 20 Jul 2021 6:00 PM - 9:00 PM
Wednesday, 21 Jul 2021 5:30 AM - 6:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Get Direction
Wednesday, 21 Jul 2021 6:00 AM - 7:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Wednesday, 21 Jul 2021 8:00 AM
Highland Hills Funeral Home and Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**செந்தூரன் - மகன்** Mobile : +16478307442

தகவல்
**குடும்பத்தினர்.**

# யாழ். கொத்தணிகளுக்கு மக்களின் பொறுப்பற்ற செயல்களே காரணம்!

## இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜுலை 20

“வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உருவாகியுள்ள கொரோனா கொத்தணிகளுக்கு மக்களின் பொறுப்பற்ற செயல்களே காரணம்.”

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா.

பருத்தித்துறை கொத்தணி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனாத் தொற்றுப் பரவலால் நாட்டு மக்கள் அனைவரும் வீட்டிலிருந்து வெளியில் செல்லும்போது முகக்கவசங்களைக் கட்டாயம் அணிய வேண்டும்.

ஆனால், பல இடங்களில் முகக்கவசங்களை நாடிகளுக்குக் கீழே விட்டுக்கொண்டு மக்கள் வெளியில் பயணிக்கின்றனர். இதில் யாழ். மாவட்ட மக்களும் விதிவிலக்கல்லர்.

கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலைகளைக் கட்டுப்படுத்த வடக்கு மக்கள் குறிப்பாக யாழ். மக்கள் முழு ஒத்துழைப்புக்களை வழங்கினார்கள். ஆனால், மூன்றாம் அலையின்போது யாழ். மக்களின் பொறுப்பற்ற செயல்கள் அதிகரித்துள்ளன.

இதனால் யாழ். மாவட்டத்தில் மூன்றாம் அலையில் அதிகளவு கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன. பல இடங்களில் கொத்தணிகள் உருவாகி பல பிரதேசங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள மக்கள் சிலர் இரகசியமாக வெளியேறி வேறு பிரதேசங்களுக்குச் சென்று அன்றாட தொழில்களில் ஈடுபடுகின்றனர். இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் புலானாய்வுத் தகவல்கள் மூலமும், சுகாதாரப் பிரிவினரின் முறைப் பாடுகள் ஊடாகவும் இதனை நாம் அறிந்துகொண்டோம்.

எனவே, யாழ். மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். கொரோனாவைக் கட்டுப்படுத்த முன்களப் பணியாளர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வடக்கில் யாழ். மாவட்ட மக்களுக்கே அதிகளவு கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கியுள்ளோம். இங்கு அடையாளம் காணப்பட்ட தொற்றா ளர்கள் அதிகம் என்றபடியால் தடுப்பூசிகளின் எண்ணிக்கையை அதிகரித்தோம். மேலும், தடுப்பூசிகள் வழங்கப்படும்” - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஔிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஔிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கண்டேன் காதலை,ரூபாய் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : கவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : ழுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு